பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 02 வியாழக்கிழமை 18.07.2019 கதிர் 255

**இனி இது ரகசியம் அல்ல!**

இலங்கைத் தமிழரசுக் கட்சி, புகலிடத் தமிழர்கள் இணைந்த குழு ஒன்று இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியுடன் ஊடாட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது.

நேற்று சென்னை தியாகராஜ நகரில் உள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் அலு பக்கம் 02

# நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நந்திக்கொடிகளை அறுத்து அடாவடி!



முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு - பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில், அடாத்தாக விகாரை அமைத்துள்ள பௌத்த பிக்கு, நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் கட்டப்பட்டிருந்த நந்திக்கொடிகளை அறுத்து எறிந்துள்ளார் எனக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. பக்கம் 11



## கன்னியா விவகாரம் குறித்து பேச ஜனாதிபதி இணக்கம்!

### அமைச்சர் மனோ கணேசன் தகவல்



கொழும்பு, ஜூலை 18

கன்னியா விவகாரம் குறித்து பேச்சு நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடன்பட்டுள்ளார் என பக்கம் 11

## தமிழர்கள் வாழும் மலையகத்திலும் பௌத்த பேரினவாத அடக்குமுறை!

### கந்தப்பளை மாடசாமி கோயிலில் பௌத்த கொடியேற்றினார் தேரர்



கொழும்பு, ஜூலை 18

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் மாத்திரமல்ல தமிழர்கள் வாழும் மலையகப் பகுதிகளிலும் சிங்கள – பௌத்த பேரினவாத அடக்குமுறை தொடர்கின்றது.

நுவரெலியா, கந்தப்பளை தோட்டப் பகுதியில் உள்ள காவல் தெய்வச் சந்நிதியில் பௌத்த விகாரை பக்கம் 11

## இலங்கையில் கால் பதிக்கின்றது சீனாவின் எண்ணெய் நிறுவனம்!




கொழும்பு, ஜூலை 18

சினோபெக் எனப்படும் சீனாவின் பெற்றோலிய மற்றும் இரசாயனவியல் நிறுவனம், இலங்கையில் எரிபொருள் விநியோக நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

பிரதான கடல்வழிப் பாதையில் செல்லும் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகங்களை மேற் பக்கம் 11

## இன்று கொழும்பு வருகின்றார் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்



கொழும்பு, ஜூலை 18

அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ற் பக்கம் 11

# அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தவறின் கூட்டமைப்பின் நாள்கள் எண்ணப்படும்

## பங்காளியான ரெலோ கடும் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 18

கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் கோவில் இடித்து அழிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு திரண்ட தமிழ் மக்களுக்கு எதிராக பௌத்த – சிங்கள இனவெறி தனது கோர முகத்தைக் காட்டியுள்ளதாகத் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செயலாளர் நாயகமும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

அரசுக்கு அழுத்தம் கொடுத்துப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கக் கூட்டமைப்பு தவறினால் அதன் நாட்கள் எண்ணப்படும் நிலைமை தவிர்க்கப்பட முடியாதது என்றும் அவர் குறிப்பிட்டார். பக்கம் 11

## வவுனியாவில் இருவர் கஞ்சாவுடன் சிக்கினர்

வவுனியா, ஜூலை 18

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் இரண்டு பேரைக் கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

86 கிராம் மற்றும் பக்கம் 11

## எமது பாதுகாப்புக்கு ஆயுதம் தூக்கத் தயார்! பிரதமர் முன் நிரூபித்தனராம் மாணவர்கள்!!

### சித்தார்த்தன் எம்.பியின் விளக்கம் இது



யாழ்ப்பாணம், ஜூலை 18

எமது பாதுகாப்புக்கு எப்போது வேண்டுமானாலும் நாம் ஆயுதம் தூக்கவும் தயாராகவே இருக்கின்றோம் என்பதை எமது மாணவர்கள் பிரதமரின் கண் முன்னாலேயே நிரூபித்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு பக்கம் 11

## காலத்தைக் கடத்தும் கதையாகவே உள்ளது

### ரணிலின் கூற்று குறித்து மாவை கருத்து



யாழ்ப்பாணம், ஜூலை 18

இரண்டு ஆண்டுகளில் அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்பது காலத்தைக் கடத்தும் கதையாகவே தெரிகின்றது. வாக்குறுதிக்கு அமைய இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழ் மக் பக்கம் 11

# அனைத்துத் தமிழ் எம்.பிக்களையும் இன்று சந்திக்கிறார் மைத்திரிபால!

கொழும்பு, ஜூலை 18

கன்னியா உள்ளிட்ட அவசர விவகாரங்களை ஆராய இன்று காலை அனைத்துத் தமிழ் எம்.பிக்களுக்கும், ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பு இடம்பெறுகிறது.

அமைச்சர் மனோ கணேசன் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

கன்னியா, நீராவியடி, நுவரெலியா கந்தப்பளை உள்ளிட்ட இடங்களில் மதப்பதற்றம் தோற்றுவிக்கப்பட்டு வரும் நிலையில், தமிழர்களின் பாரம்பரிய இடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இந்தச் சந்திப்புக்கு அமைச்சர் மனோ கணேசன் ஏற்பாடு செய்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து தமிழ் தரப்புக்கும் இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ். மாநகரசபை முன் இன்று 5 ஜிக்கு எதிராகப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

5 ஜி தொழில்நுட்பம் மனித குலத்தின் எதிரி. எம்மில் அதைப் பரிசோதிக்காதே என்ற கோரிக்கையை முன்வைத்துப் பத்துக்கு மேற்பட்ட பொது அமைப்புகள் யாழ்ப்பாண மாநகர சபைக்கு முன்பாக இன்று மு.ப. 9 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

தமிழ் மருத்துவர் குழு, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, இலங்கை ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், தேசிய கலை இலக்கியப் பேரவை, வல்லமை, கிராமிய உழைப்பாளர் சங்கம், சைவ மகாசபை, சமூக விஞ்ஞான ஆய்வு மையம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், சமூக மேம்பாட்டு அமையம், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆகிய அமைப்புகள் இணைந்து அறிக்கையை வெளியிட்டுள்ளன.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்தின் மக்கள் செறிவாக வாழ்கின்ற பல இடங்களிலும் சுமார் 80 அடி உயரமான கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன. இவை அதியுச்ச திறன்கொண்டதும் முறையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தி பன்னாட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாததும் மாறாகப் பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆய்வாளர்கள், மருத்துவத்துறை சார்ந்தோர் மற்றும் சூழலியலாளர்களால் வன்மையாக எதிர்க்கப்படுகின்றதுமான, ஐந்தாவது தலைமுறைத் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பமான 5ஜி அலைக்கற்றைகளுக்கானவை என்று அறியக்கூடியதாக இருக்கின்றது.

மக்களின் எதிர்ப்புகளைக் கவனத்தில் எடுத்து, இந்தச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துவதற்கு இதுவரை எந்தவொரு உள்ளூராட்சிச் சபைகளோ, மாகாண, கொழும்பு அரசுகளின் இதனுடன் தொடர்புடைய திணைக்களங்களோ, அரசியல்வாதிகளோ முன்வராமை பெரும் ஏமாற்றத்தைத் தருகின்றது.

இந்த 5ஜி தொழில்நுட்பமானது, பொருள்களின் இணையம், தானியங்கி வாகனங்கள், தீவிர உயர் வரையறை காணொலி போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கானது. பல்தேசியக் நிறுவனங்கள், இத்தகைய செயற்கை நுண்ணறித் தொழில்நுட்பத்தையும் தானியங்கல் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்தியதன் மூலம், ஏராளமானோருக்கு வேலையிழப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

மண்ணிலும் விண்ணிலும் 5ஜியை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதற்கான பன்னாட்டு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பில், இதுவரை 187 நாடுகளைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் கையொப்பமிட்டுள்ளனர்.

5ஜி தொழில்நுட்பமானது, மக்களை மின் உணர்திறன்மிக்கவர்களாக மாற்றிவிடும். மின்காந்தப் புலத்தின் தாக்கத்துக்கு உள்ளாகுபவர்கள், மின் உணர்திறன் மிக்கவர்களாக மாறுகிறார்கள். மறதி, கவனஞ்செலுத்த இயலாமை, இதயத்துடிப்பு அதிகரித்தல், சோர்வும் களைப்பும், காது, கண் போன்றவற்றில் வலி ஏற்படுதல், வீங்குதல் போன்றன அவற்றில் சில. இது பல சமயங்களில் நிரந்தரமான உடலியல் உபாதைகளுக்கும் வழிவகுக்கும்.

மருத்துவத் தேவைகளுக்கும் கல்வி, ஆய்வு, பாதுகாப்புத் தேவைகளுக்கும் இந்தத் தொழில்நுட்பம் அவசியமெனக் கருதினால், அதைத் தேவையான இடங்களில் மிகவும் கவனமாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில், மக்கள் அதிகம் வசிக்காத பகுதிகளில் மேற்கொள்ளவேண்டும்.

எனவே, பரிசோதனை எலிகளாக எம்மைப் பார்க்கின்ற, இந்த ஆபத்தான தொழில்நுட்பத் திணிப்பை எதிர்த்து அனைவரும் அணிதிரள்வோம் - என்றுள்ளது. (ஐ)

## பிரேரணையில் வென்றாலும் அரசு தேர்தல்களில் தோற்பது உறுதியே!

### கூறுகிறார் அத்துரலிய ரத்ன தேரர்

கொழும்பு, ஜூலை 18

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெற்றாலும், எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெற முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டியில் இடம்றெற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாப்பதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னின்றாலும் கீழ் மட்டத்திலுள்ள இந்து மக்கள் முற்றாக அரசை எதிர்ப்பதாகவும் அவர்களும் அரசை மாற்றத் தயாராக உள்ளனர் என்றும் அத்துரலிய தேரர் குறிப்பிட்டார். (ஐ)

## மரண தண்டனைக்கு எதிரான மனு விசாரணை ஒக்ரோபர் 31

கொழும்பு, ஜூலை 18

மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நால்வருக்கு தண்டனையை அமுல்படுத்துவது தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள தீர்மானத்தை ரத்துச் செய்யுமாறு, ஊடகவியலாளர் ஒருவர் தாக்கல் செய்த மனுவை ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு குறித்த அடிப்படை விடயங்களை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் யசன்ன கோதாகொட (தலைவர்) தலைமையிலான ஐவர் அடங்கிய மேன்முறையீட்டு நீதியரசர் குழாமால் இந்த மனுவை விசாரிப்பதற்கு அனுமதி வழங்குவதா இல்லையா? என்பது தொடர்பில் நேற்று தீர்மானிக்கப்படவிருந்தது.

எனினும் மரணதண்டனையை அமுல்படுத்துவதைத் தடுக்குமாறு, மேல் நீதிமன்றத்தால் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி வரை தடையுத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், தமது தீர்ப்பை அறிவிக்காமலிருக்க ஐவர் அடங்கிய மேன்முறையீட்டு நீதியரசர்கள் குழாம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, ஊடகவியலாளர் தாக்கல் செய்த மனுவை ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி விசாரணை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலகமான தமிழாலயத்தில் அக்கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர்களுடன் சுமார் இரண்டு மணிநேரம் சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் சத்தியலிங்கம், திருகோணமலை மாவட்டத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு.குகதாஸன் ஆகியோர் பங்கு பற்றினர். கனடாவிலிருந்து திருகோணமலை திரும்பியுள்ள குகதாஸன் இப்போது சம்பந்தனின் வலதுகரம். நேற்றைய சந்திப்புக்குத் தனது பிரதிநிதியாக குகதாஸனை சம்பந்தனே அனுப்பி வைத்தார் என்றும் ஒரு தகவல்.

புலம்பெயர்ந்தோர் தரப்பில் British Tamils Forum சார்பில் ஞானி, ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் சார்பில் இளங்கோ ஆகியோர் பங்குபற்றினர். இணைப்பாளராக நிரஞ்சன் நந்தகோபன் செயற்பட்டார்.

பாரதீய ஜனதாக் கட்சி சார்பில் அதன் தமிழ் மாநில தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன், இல.கணேசன், முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.இராதகிருஷ்ணன், வானதி ஸ்ரீநிவாசன் உட்பட்ட குழு பங்குபற்றியது.

இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு ஒன்றுபட்டு செயற்பட இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்ட தாகக் கூறப்பட்டது.

இலங்கைத் தமிழரின்பால் பரிவு கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பங்களிப்பை உரிய முறையில் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் குறித்தும் இருதரப்பினரும் ஆராய்ந்தனர். தொடர்பாடல்களை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான உபாயங்கள் குறித்தும் பரிசீலிக்கப்பட்டதாக அறியவந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அண்மையில் சென்னை விஜயம் செய்திருந்தார். அவர் இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், பழ.நெடுமாறன் போன்றோரையே சந்தித்தார்.

ஆனால், தமிழரசுக் கட்சியின் அடுத்தமட்டக் குழு ஒன்று புகலிடத் தமிழர்களின் பிரதிநிதிகளையும் சேர்த்து அரவணைத்துக் கொண்டு வந்து, இந்தியாவில் மத்தியில் ஆட்சியிலிருக்கும் அரசின், மாநிலத் தலைவர்களைச் சந்தித்து அவர்கள் மூலம் காய் நகர்த்த முயற்சிக்கின்றது.

நல்ல எத்தனம். இதற்கு சம்பந்தனின் ஆசீர்வாதமும், வாழ்த்தும் இருப்பதாகத் தெரிகின்றது. அது நல்லது.

அவருக்கு அப்பால் தமிழரசுக் கட்சிக்குள் இந்த முயற்சி தொடர்பில் எதிர்வினை யாது எனக் கண்டறிய வேண்டும்.

ஏற்கனவே பா.ஜ.கவுடன் ஊடாடும் தமிழரசுக் கட்சியின் சாமியாராக மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான யோகேஸ்வரன் இருக்கின்றார். அவர், மாவை போன்றோர், கிறிஸ்தவ மத பின்னணி கொண்ட சில பிரமுகர்கள் எனப் பலர் உள்ளனர். அவர்களின் பிரதிபலிப்பைப் பொறுத்தே இந்தக் குழுவின் சென்னை விஜயத்தின் பலன் தங்கியிருக்கப் போகின்றது.

எது, எப்படி என்றாலும், ஆரம்பமாகப் போடப்படும் பிள்ளையார் சுழி சரியாகப் போடப்பட்டிருப்பதாகவே நான் நினைக்கிறேன்.

- மின்னல் -







காலைக்கதிர் Kalaikathir



# யாரை ஆதரிக்கும் ஈ.பி.டி.பி.? இன்னும் முடிவு இல்லையாம்!



கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவை வழங்குவது என்பது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இன்னமும் தீர்மானிக்கவில்லை எனக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெற இருக்கின்றது. அந்தத் தேர்தல் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் பல தரப்பிலும் வெளியிடப்பட்டு வருகின்றன. இந் நிலையில் அந்தத் தேர்தலில் யாரை ஆதரிப்பது அல்லது யாருக்கு ஆதரவை வழங்குவது என்பது எமது கட்சிக்கு ஒளிவு மறைவுகள் இல்லை.

ஆனாலும் யாரை ஆதரிப்பதானாலும் தமிழ் மக்கள் தொடர்பில் நாம் கோரிக்கைகளை முன்வைப்போம். அந்தக் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கின்றவர்களுக்கு நிச்சயமாக எமது ஆதரவை வழங்குவோம்.

அதே நேரம் இந்தத் தேர்தல் குறித்து இப்போது பேசப்பட்டாலும் அதில் போட்டியிடும் வேட்பாளர்கள் யார் யார் என்பதும் தெரியவில்லை. ஆகையினால் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதும் எமது அடுத்த கட்ட நடவடிக்கையை நாம் முன்னெடுப்போம் – என்றார். (ஐ)

# கல்முனைக்கு நேற்றும் கணக்காளர் வரவில்லை

மட்டக்களப்பு, ஜூலை 18

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்றுக் கணக்காளர் பதவியேற்பார் எனக் கூறப்பட்டிருந்தபோதும் அவர் அங்கு நேற்றும் பதவியேற்கவில்லை.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தவேண்டுமென்ற கோரிக்கை பொதுமக்கள், சிவில் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டு, தன்னெழுச்சியான போராட்டமாக எழுந்தது. இது வெகுஜனப் போராட்டமாக மாற்றமடைந்ததையடுத்து, தவிர்க்கவியலாமல் அரசியல் தரப்புக்கள் இது குறித்து அரசை வலியுறுத்தின. அமைச்சர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன இதை வலியுறுத்தியதையடுத்து, கல்முனையை தரமுயர்த்துவதைத் தவிர்த்து, முதற்கட்டமாகக் கணக்காளரை நியமிக்க ஒப்புதல் அளித்தது.

கணக்காளர் நியமனத்துக்குத் திறைசேரிச் செயலாளர் அனுமதியளித்தார். இதையடுத்து, கணக்காளர் நியமனத்திற்கான அனைத்து உத்தியோகபூர்வப் பணிகளும் நிறைவடைந்தன.

உகண பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தமிழ் உத்தியோகத்தர் ஒருவரே கல்முனைக்குக் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்டுவிட்டது. எனினும், பதில் கணக்காளர் இதுவரை நியமிக்கப்படாதமையால் அவர் தனது புதிய பொறுப்பை இதுவரை ஏற்க முடியவில்லை. நேற்றுக் கணக்காளர் கல்முனைக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்டபோதும், உகண பிரதேச செயலகத்திற்குப் பதில் கணக்காளர் நியமிக்கப்படாதமையால் நேற்றும் கல்முனை பதவியேற்பு நடக்கவில்லை.

இன்று அல்லது நாளை கணக்காளர் கல்முனையில் பதவியேற்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# பெண் சிப்பாயும், சகோதரரும் வாள்வெட்டில் படுகாயம்!

## வவுனியாவில் இரவு சம்பவம்

வவுனியா, ஜூலை 18

வவுனியா – ஓமந்தை, புதியவேலர் சின்னக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெண் இராணுவச் சிப்பாய் ஒருவரின் வீட்டுக்குள் அயல் வீட்டுக்காரர் புகுந்து வெட்டியதில் பெண் இராணுவச் சிப்பாய் காயமடைந்தார். இதனைத் தடுக்கச் சென்ற சகோதரன் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு ஓமந்தை புதியவேலர்சின்னக்குளம் பகுதியில் வசித்து வரும் பெண் இராணுவச் சிப்பாயின் வீட்டுக்குள் புகுந்த பக்கத்து வீட்டுக்காரர், இராணுவத்தில் பணிபுரிய வேண்டாம் அல்லது இங்கு இருக்க வேண்டாம் என்று தெரிவித்து அந்தப் பெண் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதன்போது வெட்டுக் காயத்துக்குள்ளான பெண் இராணுவச் சிப்பாயைக் காப்பாற்றுவதற்காக ஓடிச் சென்ற சகோதரன் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சகோதரியும், சகோதரனும் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெட்டுத்தாக்குதலுடன் தொடர்புபட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# எஸ்.பிக்கு ஆப்பு வைக்கிறது சு.க.?

## பொருளாளர் பதவி பறிபோகிறது



கொழும்பு, ஜூலை 18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் பதவியிலிருந்து எஸ்.பி. திஸாநாயக்கவை நீக்குமாறு கட்சியின் தலைமைப்பீடத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அடுத்தமத்தியசெயற்குழுக் கூட்டத்தில் இதற்கான யோசனை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படலாம் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

சுதந்திரக்கட்சியில் முக்கிய பதவியை வகித்துக்கொண்டு கூட்டு எதிரணிக்கு விசுவாசமாகவே எஸ்.பி. திஸாநாயக்க செயற்படுகின்றார் என்றும், எனவே, அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என மூத்த உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளருமான மஹிந்த அமரவீரவை, எஸ்.பி. திஸாநாயக்க அண்மையில் கடுமையாக விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே எஸ்.பி. திஸாநாயக்கவின் பதவி பறிக்கப்படவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (ஐ)

# தோழர் கார்த்திகேசனின் நூற்றாண்டு தின நிகழ்வு







யாழ்ப்பாணம், ஜூலை 18

பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடியான தோழர் மு.கார்த்திகேசனின் நூற்றாண்டு தின நிகழ்வு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

சட்டத்தரணி ரெங்கன் தேவராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு கார்த்திகேசனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் கார்த்திகேசனின் உறவினர்கள், நண்பர்கள். மாணவர்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ – 07)

# தெரிவுக்குழு விசாரணைகள் ஒரு மாதத்துக்குள் முடியும்!



சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை இன்னும் ஒரு மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

புலனாய்வு அதிகாரிகளின் புகைப்படங்களை வெளியிடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ள சரத் பொன்சேகா, பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் புலனாய்வு அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்றால் அது தொடர்பில் பொதுமக்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதமர், ஜனாதிபதி மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சின் முன்னாள் அமைச்சர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், இவர்களின் சாட்சிகள் மிகவும் பெறுமதியானவை என்றும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

சாட்சியமளித்த பின்னர் மீண்டும் தெரிவுக்குழுவுக்கு அழைக்கப்பட அவசியமானவர்கள் உள்ளனர் எனத் தெரிவித்த சரத் பொன்சேகா, எவ்வாறாயினும் மக்களுக்கு உண்மையை அறிந்துகொள்ளும் அவசியம் உள்ளதாகவும், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பது தொடர்பில் வெளிப்படுத்த முடியும் என்றும் மேலும் கூறினார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தேவை : துடிப்பான தலைமை!

திருகோணமலையில் தமது பாரம்பரிய – தொன்மை மிக்க – கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயத்துக்கு உணர்வெழுச்சியுடன் திரண்ட தமிழ் மக்கள் அங்கு செல்ல விடாது தடுக்கப்பட்டிருக்கின்றனர்.

அது மாத்திரமல்ல, அந்த மக்களோடு சென்ற தென்கயிலை ஆதீன சுவாமிகள் மீது சிங்களவர்கள் சுடுநீர் ஊற்றி அட்டகாசம் புரிந்திருக்கின்றனர்.

கன்னியா வெந்நீரூற்று தமிழர்களின் – சைவர்களின் – பாரம்பரிய பிரதேசம். தமிழர்களின் வரலாற்று வேரோடல்கள் ஆழமாகப் பதித்த இடம் அது. ஈழ மன்னன் இராவணேஸ்வரனுடன் தொடர்புபடுத்தும் கர்ண பரம்பரைக் கதைகளின் மூல இடம் அது.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை முழுத் தமிழர் பிரதேசமாக இருந்த வழிபாட்டுத் தலம். அங்கிருந்த பிள்ளையாரை அகற்றி விட்டு விகாரை கட்டும் அடாத்துத்தனம் அங்கு அரங்கேறுகின்றது.

திருகோணமலையில் தமிழின இருப்பை கேள்விக்குறியாக்கும் நடவடிக்கையின் ஓர் அங்கமே கன்னியாவில் இடம் பெறுகின்றது.

வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டுகின்றமைபோல கன்னியாவில் இடம்பெறும் – பிள்ளையார் ஆலய அழிப்பு – கலாசார ரீதியான இனப்படுகொலையே.

“தமிழ் மக்களின் ஆயிரம், ஆயிரம் ஆண்டு கால வரலாற்று வேரோடல்களைக் கொண்ட இந்தப் புராதன பெருமைமிக்க பகுதியைத் தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் மக்கள், சிவில் அமைப்புக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் அங்குள்ள பிள்ளையார் ஆலய அத்திபாரத்தை உடைத்து, அதில் பௌத்த விகாரை கட்டும் விதத்தில் பேரினவாத ஆதிக்கத்தை முன்னெடுப்பது தமிழர்களின் நெஞ்சைப் பிளப்பது போன்றதாகும்.” – என்று நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டுகின்றமை சிந்திக்கப்பட வேண்டிய விடயம்.

தமிழர்கள் தமது தாயகத்தின் தலைநகர் என்று போற்றும் திருகோணமலையில்தான் இந்தப் பேரினவாத மேலாதிக்கத் திமிர் அரங்கேறுகின்றது.

அதுவும் தமிழர்களின் ஜனநாயகப் பிரதிநிதிகள் என்று தம்மைத் தாமே முன்னிலைப்படுத்திக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் சொந்த மாவட்டத்தில்தான் இப்படி தினசரி நில ஆக்கிரமிப்பைப் பேரினவாத மேலாதிக்கம் வெற்றிகரமாக முன்னெடுக்கின்றது. அங்கு தமது தாயகத்தைப் பேரினவாதப் பூதத்திடம் தினசரி இழக்கும் கையறு நிலையில் தமிழினம் அல்லாடுகின்றது.

அந்த மக்களின் ஜனநாயகப் பிரதிநிதிகள் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனோ, அவரது சகாவான துரைரட்ணசிங்கமோ இந்தச் சிங்களப் பேரினவாத மேலாதிக்க ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கை எடுப்பவர்களாக இல்லை.

தள்ளாத வயதின் உச்சத்தில் நிற்கும் அவர்களால் இத்தகைய ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகத் துணிச்சலுடன் வீறு கொண்டு எழுந்து, மக்கள் சக்தியைத் திரட்டி, ஓர் எதிர்ப்புப் போராட்டத்தைக் காட்ட முடியவில்லை. திருகோணமலையில் அத்தகைய போராட்டத்துக்கு வெளியில் இருந்துதான் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்ற அவல நிலைமை.

சம்பந்தன் தமக்குப் பின்னர், துரைரட்ணசிங்கத்தை அடுத்து, கைகாட்டி அடையாளப்படுத்தும் 'கனடா இறக்குமதி' புகழ்குகதாசனும் கூட அத்தகைய போராட்டத் தலைமை ஒன்றை திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களுக்குத் தரக் கூடியவர் அல்லர்.

இன்றைய நிலையில் திருகோணமலையை – தமது பாரம்பரிய வாழிடப் பூமியை – தமிழர்கள் தக்க வைத்துக் காப்பதாயின் அவர்களுக்கு ஒரு ‘பயர் பிராண்ட்’ தலைவர் – துடிப்பும், துணிச்சலும், தீர்க்கதரிசனமும் மிக்க ஒரு தலைவர் – தேவைப்படுகின்றார்.

சம்பந்தனை நம்பியிருந்தால், அத்தகைய தலைவர் திருகோணமலைக்கு கிடைக்கமாட்டார். ‘கட்டியிருந்த வேட்டியை மட்டுமல்ல, கோவணத்தையும் இழந்து அல்லாடுவது போன்ற’ நிலைமைதான் தமிழர்களுக்கு ஏற்படும்.

கன்னியாவையும், திருகோணமலையையும், ஏனைய தமிழர் பிரதேசங்களையும் காப்பாற்றுவதற்கு ஒரே வழி பிரதமர் ரணிலுடன் பேசுவதுதான் என்று சம்பந்தன் அந்த வழியில் முயற்சிப்பார். இன்றைய நிலையில் சம்பந்தனின் ஆதரவு தமக்குத் தேவை என்று கருதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதற்கான உத்தரவைப் போடுவார். ஆனால், ரணில் – கூட்டமைப்பு இணக்கத்தை உடைத்தே தீர வேண்டும் என்பதில் கங்கணம் கட்டி நிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவோ, ரணில் உத்தரவை முறியடித்துக் கட்டளை பிறப்பிப்பார். இப்படித்தான் கன்னியா வெந்நீரூற்று சர்ச்சையிலும் நடக்கின்றது.

சம்பந்தனின் ‘சாத்வீக’ – ‘இணக்க’ – ‘உடன்பாடு’ அரசியல் மூலம் இந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவது சாத்தியமற்றது என்றே தோன்றுகின்றது.

கன்னியா வெந்நீரூற்று விவகாரம் என்றில்லை, முல்லைத்தீவு, செம்மலை, நீராவியடி ஆலய விவகாரத்தில் இருந்து பல்வேறு பேரினவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்குத் துடிப்பான ‘சூடான’, 'மென்போக்கைத் தாண்டிய’ ஒரு தலைமை அத்தியாவசியமானது என்ற எண்ணமே இன்று தமிழர்கள் மத்தியில் மேலோங்கி வருகின்றது.

கூட்டமைப்புத் தலைமை சிரத்தை எடுத்து சிந்திக்க வேண்டிய விடயம் இது.

# நவாலியில் சிறப்புற்ற ஆடிப்பிறப்பும் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும்







யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழாவும் தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நவாலி மகா வித்தியாலய அரங்கில் சிறப்புற இடம்பெற்றது.

தமிழ்ச்சங்க உறுப்பினர் ஜீவா. சஜீவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புலவரின் திருவுருவச் சிலைக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் மலர்மாலை அணிவித்தார். பாடசாலை அதிபர் கி.கிருஷ்ணானந்தா பாடசாலை நிறுவுநர் பண்டிதர் தம்பையாவின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார்.

. தொடர்ந்து தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆசியுரை வழங்கினார். பாடசாலை அதிபர் கி. கிருஷ்ணானந்தா வாழ்த்துரை வழங்கினார்.

ஆடிப்பிறப்புக் குறித்த சிறப்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் ஆற்றினார். உத்தராயணத்தில் இருந்து தெட்சணாயனத்தை நோக்கிய நிலைமாற்றக் காலமே ஆடிப்பிறப்பு என்ற அவர், ஆடி மாதத்தின் பெருமைகளையும் தமிழர் பண்பாட்டை பேணுவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் குறித்த நினைவுப் பேருரையை சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் தமிழ்ச்சங்க உபதலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்தினார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆக்கங்கள் குறித்த பெருமைகளை எடுத்தியம்பிய அவர் இன்றைய பாடநூல்களில் புலவரின் பாடல்கள் இடம்பெறாமை குறித்துக் கவலை வெளியிட்டார். புலவரின் பாடல்களில் உள்ள இரசனையை சபையோர் இரசிக்கும் படியாக எடுத்துரைத்தார்.

நிகழ்வின் நிறைவாக யாழ். முன்னணி இசைக்கலைஞர்கள் அருணா கேதீஸின் இசையில் இணைந்து வழங்கிய இசைச்சங்கமம் இடம்பெற்றது. சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் மகா வித்துவான் வீரமணி ஐயரின் பாடல்கள் மற்றும் நாட்டார் பாடல்கள் நிகழ்வில் பாடப்பட்டன. இசைநிகழ்வைத் தமிழ்ச்சங்கச் செய லர் இ.சர்வேஸ்வரா தொகுத்து வழங்கினார். விரிவுரையாளர் வேல். நந்தகுமார் நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர். கலந்து கொண்ட மாணவர்களுக்கு கற்றல் பொதிகளும் வழங்கப்பட்டன. (ஐ)

# வடக்கு மாகாண ஆளுநருடன் ஆஸ்திரேலியத் தூதுவர் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 18

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிட் ஹொலி வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முன்தினம் மாலை ஆளுநரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்தார்.



இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் ஆஸ்திரேலிய அரசால் வட மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டதுடன் வடக்கு மாகாணத்தின் நீர்ப் பிரச்சினை, அதனை தீர்ப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள 'வடமராட்சி களப்பு’ திட்டம் உள்ளிட்ட செயற்திட்டங்கள் குறித்தும் விரிவாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை, இலங்கை அகதிகள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் உள்நுழைய முயற்சிக்கின்றமை குறித்து கருத்துத் தெரிவித்த தூதுவர், சட்டவிரோத குடியேற்றவாசிகளைக் கட்டுப் படுத்த ஆஸ்திரேலிய அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இதன்போது , சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்று குறிப்பிட்ட ஆளுநர், அகதிகள் விடயத்தில் ஆஸ்திரேலிய அரசானது கனடா போன்று மனிதாபிமான ரீதியில் உள்ளீர்ப்பது தொடர்பில் கொள்கையொன்றை உருவாக்குவதன் ஊடாகச் சர்வதேச ரீதியில் தனக்கான இடத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கும் ஆஸ்திரேலிய அரசின் தூதரகம் ஊடாக உதவி செய்வதற்குத் தயாராக இருக்கின்றார் எனத் ஆஸ்திரேலிய தூதுவர் குறிப்பிட்டதுடன் , ஏற்கனவே பயிற்சி வழங்கல் உள்ளிட்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களை வடக்கு மாகாணத்தில் மேற் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார். இது தொடர்பில் ஆளுநருடன் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருக்கிறார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## நாளை

19.07.2019
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: அவிட்டம் பி.இ 4.24 வரை
திதி : துதியை காலை 6.35 வரை

இராகுகாலம் : 10.31 – 12.01
சுப நேரம் : 6.01 – 7.31

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவகற்றல் பணிகள் முடங்கின

யாழ்ப்பாணம், ஜுலை 18

யாழ்ப்பாணம் மாநகர சபை தொழிற்சங்க தலைவரை விடுவிக்க வலியுறுத்தி சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகள் அகற்றப்படாது குப்பைகள் தேங்கியுள்ளன.

கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாண மாநகர சபையின் மேற்பார்வையாளர் ஒருவருக்கும், தொழிற்சங்கத் தலைவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப்பாக மாறியது. அதனால் தொழிற்சங்கத் தலைவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தையடுத்து தொழிற்சங்கத் தலைவருக்கு, மாநகர சபை ஆணையாளரினால் பணி இடைநீக்க கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமது தொழிற்சங்கத் தலைவரை விடுவிக்க வலியுறுத்தியும்,மாநகர சபை ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பணி இடைநீக்க கடிதத்தை மாநகர சபை ஆணையாளர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் குதித்தனர்.

இதனால் யாழ்ப்பாணம் மாநகர கழிவகற்றல் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. (ஜ - 07)



சுகாதாரத் தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பில்



## செல்பியால் வினை; இருவரை காணோம்!

கொழும்பு, ஜுலை 18

காலி, உனவட்டுன ரூமச்செல்ல பகுதியில் குன்று ஒன்றின் மீது ஏறி செல்பி எடுக்க முற்பட்ட நால்வர் கடலில் விழுந்துள்ளனர்.

அவர்களில் இருவர் காப்பற்றப்பட்டுள்ளதுடன் இருவர் நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளனர்.

கினிமெல்லகஹ, தெலிகட பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளனர்.

இந்த இளைஞர்களை தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுமியை திருமணம் செய்தவர் கைதானார்

திருகோணமலை – கிளிவெட்டிப் பகுதியில் 15 வயதுச் சிறுமியை சட்டத்திற்கு முரணான வகையில், திருமணம் செய்த ஒருவரை இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் உத்தரவிட்டார்.


தங்க நகர், கிளிவெட்டி பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பதினைந்து வயதுடைய சிறுமியை மூன்று வருட காலமாகக் காதலித்து திருமணம் முடித்துள்ளதாகவும் அந்த விடயம் தொடர்பாக அப்பகுதி கிராம அதிகாரி மற்றும் பொதுமக்களும் சேருநுவர பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய அவரைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை பொலிஸார் மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனச் சேருநுவர பொலிஸார் கூறினர். (ஜ)

## கட்டுநாயக்கவில் மற்றொரு அமெரிக்க சரக்கு விமானம்





கொழும்பு, ஜுலை 18

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய மற்றொரு அமெரிக்க சரக்கு விமானம் நேற்று முன் தினம் அதிகாலை புறப்பட்டுச் சென்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெஸ்ரேன் குளோப் எயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த விமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.50 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

நேற்று முன்தினம் அதிகாலை 2.50 மணியளவில் இந்தச் சரக்கு விமானம், ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள புஜாரா விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்த விமானம், பசுபிக் தீவாக குவாமில் உள்ள அமெரிக்காவின் அன்டர்சன் விமானப்படைத் தளத்தில் இருந்தே, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்தது.

கடந்தவாரமும், வெஸ்ரேன் குளோப் எயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தது.

அந்த விமானம் எரிபொருள் தேவை மற்றும் விநியோக சேவைகளை பெற்றுக் கொள்வதற்காகவே கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியதாக இலங்கை அரசு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், அக்சா உடன்பாட்டுக்கு அமைய, இலங்கையை அமெரிக்கா விநியோகத் தளமாகப் பயன்படுத்த ஆரம்பித்திருப்பதாக சந்தேகங்கள் கிளம்பியுள்ளன. (ஜ)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை வெள்ளிக்கிழமை** காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில்-**

மாதகல், காஞ்சிபுரம், குசுமாந்துறை, காட்டுப்புலம், யம்புகோளப் பட்டினம், யம்புகோளப்பட்டினம் வாடி வீடு, ஆர்க் லேன் உடுவில், அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

ஆனந்தபுரம், பாரதிபுரம், கிருஷ்ணபுரம், மலையாளபுரம், இரணைமடு சந்தி, NAITA கிளிநொச்சிவைத்தியசாலை, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், Wickramaratne pvt LTD, Ware House Complex இராணுவ ஆதார வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

செம்மணத் தீவிலிருந்து நானாட்டான் வரை, அளவாக்கை, பள்ளங்கோட்டை, அச்சங்குளம், செம்மணத் தீவு Ware House ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## வவுனியாவில் ரயில் மோதி படுகாயமுற்ற வயோதிபர்

வவுனியா, ஜுலை 18

வவுனியா – ஈரப்பெரியகுளம் ரயில் கடவைப்பகுதியில் நேற்று முன்தினம் காலை ரயில் மோதி படுகாயமடைந்த நிலையில், 60 தொடக்கம் 65வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் பற்றிய தகவல்கள் எவையும்தெரியவில்லை. ரயில் பயணித்தபோது கீழே வீழ்ந்து காயமடைந்திருக்கலாம் அல்லது தற்கொலை செய்ய முயற்சித்திருக்கலாம் அல்லது தவறி விழுந்திருக்கலாம் என்று பல்வேறு சந்தேகங்களுடன் அந்த வயோதிபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு விபத்துப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரியுள்ளனர். (ஜ)



## சாவகச்சேரியில் சிக்கிய கஞ்சா!

யாழ்ப்பாணம், ஜுலை 18

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலாப் பயணிகள் வந்த வாகனத்தில் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

வவுனியா, கல்குளம் பகுதியிலிருந்து சிலர் யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வந்துள்ளனர்.

அவர்கள் பயணித்த வாகனத்தைச் சாவகச்சேரிப் பகுதியில் வழிமறித்த பொலிஸார் சோதனை மேற்கொண்டனர். அதில் 4 கிலோ கஞ்சா காணப்பட்டுள்ளது. வாகனத்தில் பயணித்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம், அந்த நபர் வவுனியா ஈரப்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் வன்னிநாயக்க எனும் பொலிஸ் உத்தியோகத்தர் என்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவரும் சாவகச்சேரிப் பொலிஸார், கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

# 2 பெண் பொறியியலாளர்கள் பஸ் சில்லில் சிக்கி உயிரிழப்பு



சென்னை, ஜூலை 18

சென்னை நந்தனத்தில் வாலிபருடன் மோட்டார் சைக்கிளில் வந்த 2 பெண் பொறியியலாளர்கள் பஸ் சில்லில் சிக்கி உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந் தனர்.

ஆந்திரா மாநிலம் கோதாவரி மாவட்டத்தை சேர்ந் தவர் புஜ்ஜி பாபு சிவா (வயது – 22). பொறியியல் பட்ட தாரி. சிவா சென்னை வேளச்சேரியில் தங்கியிருந்து எழும்பூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன் தினம் காலை சிவா தன்னுடன் பணிபுரியும் பொறியியலாளர்களான பவானி (வயது –23), நாகலட்சுமி (வயது –22) ஆகி யோருடன் தனது மோட்டார் சைக்கிளில் வேளச்சேரி யில் இருந்து எழும்பூர் நோக்கிச் சென்றார்.

ஒரே மோட்டார் சைக்கிளில் சென்ற 3 பேரில், சிவா மட்டும் ஹெல்மெட் அணிந்திருந்தார். மோட்டார் சைக்கிள் நந்தனம் ஒவை.எம்.சி.ஏ. அருகே அண்ணா சாலை யில் வந்தபோது, அந்த வழியாக சென்ற மாநகர பஸ்ஸை சிவா இடதுபுறமாக முந்தினார். அப்போது திடீரெனச் சந்துக்குள் இருந்து ஓட்டோ ஒன்று வந்தது. இதைக்கண்ட சிவா நிலைதடுமாறி பஸ் மீது மோதினார்.

இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற பவானி, நாக லட்சுமி மற்றும் சிவா மீது மாநகர பஸ்ஸின் சக்கரம் ஏறி இறங்கியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த விபத் தில் பவானி மற்றும் நாகலட்சுமி சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். சிவா பலத்த காயங்களுடன் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார். அந்த வழியாகச் சென் றவர்கள் இந்த சம்பவம் குறித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

விரைந்து வந்த கிண்டி போக்குவரத்து புலனாய்வு பொலிஸார் பவானி மற்றும் நாகலட்சுமியின் உடலை மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும் படுகாயம் அடைந்த சிவாவுக்கும் அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சம்பவம் நடந்த இடத்தில் உள்ள கண்காணிப்பு கமராவை ஆய்வு செய்த பொலிஸார் சிவா அதிவேகமாக வந்ததாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் பஸ் சாரதி குணசேகரன் (வயது –41) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஹிந்தி, ஆங்கிலத்தில் மட்டும் நடந்த தபால் ஊழியர் பரீட்சை ரத்தாகியது

## தமிழ் உட்பட மாநில மொழிகளில் நடத்த முடிவு

இந்தி, ஆங்கிலத்தில் மட்டும் நடத்தப்பட்ட தபால் ஊழியர் தேர்வு ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது. தமிழ் உட்பட மாநில மொழி களில் தேர்வு புதிதாக நடைபெறும் என்று அறி விக்கப்பட்டு உள்ளது.

நாடு முழுவதும் தபால் துறையில் காலியாக இருக்கும் தபால்காரர் உள்பட 4 வகையான பணி யிடங்களை நிரப்புவதற்காக கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது.

இதற்கு முன்பு நடத்தப்பட்ட தபால் துறை தேர்வு தமிழ் உட்பட 15 மாநில மொழிகளில் நடத்தப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு இத்தேர்வை ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டும்தான் எழுத முடியும் என்று கடந்த 11ஆம் திகதி திடீரென அறிவிப்பு வெளியானது.

இதனால், தமிழ்நாட்டில் இருந்து தேர்வுக்கு விண்ணப்பித்து இருந்த ஒரு லட்சத்துக்கும் அதி கமானோர் அதிர்ச்சி அடைந்தனர். சென்னை, கோவை, மதுரை, திருச்சி ஆகிய 4 மையங்களில் அவர்கள் தேர்வை எழுதியபோதும், ஆங்கிலம் மற்றும் இந்தியில் தேர்வு நடத்தியதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், தேர்வுக்கு ஒரு நாள் முன்னர், இந்தப் பிரச்சினை தொடர்பாக சமூக ஆர்வலர் ஹென்றி திபேன் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் அவசர வழக்கு ஒன்றை தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதிகள், தபால் துறை தேர்வுக்கு தடை இல்லை என்றும், தேர்வு முடிவை வெளியிட தடை விதிப்பதாகவும் அறிவித்தனர்.

மேலும், தபால் துறை தேர்வை இருமொழி களில் நடத்துவது தொடர்பாக மத்திய அரசு அறிக்கை அளிக்கவேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் தபால் துறை தேர்வு நடத்தப்படுவதற்கு தமிழகத்தில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித் தன. நாடாளுமன்ற மாநிலங்களவையில் இப் பிரச்சினையை அ.தி.மு.க., தி.மு.க. உறுப்பினர்கள் எழுப்பினர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் இரண்டா வது நாளாக, மாநிலங்களவையில் தபால் துறை தேர்வு பிரச்சினை எழுப்பப்பட்டது. முற்பகல்11 மணிக்கு மாநிலங்களவை கூடியவுடன், அ.தி.மு.க. உறுப்பினர்கள் இதுதொடர்பாக கோஷங்களை எழுப்பினர். கேள்விகள் தமிழில் இல்லாததால், தபால் துறை தேர்வை ரத்து செய்ய வேண்டும், புதிதாக தேர்வு நடத்த வேண்டும் என்று அவர்கள் கோஷமிட்டனர்.

அவர்களுக்கு ஆதரவாக தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்களும் அதே கோரிக் கையை எழுப்பி கோஷமிட்டனர்.

அப்போது, சபைத்தலைவர் வெங்கையா நாயுடு, திங்கட்கிழமை இதே பிரச்சினையை அ.தி. மு.க. உறுப்பினர்கள் எழுப்பினர். இந்த கோரிக் கையை ஏற்குமாறு மத்திய அரசுக்கு நான் உத் தரவிட முடியாது. அதற்கு விதிகளில் இடம் இல்லை. அப்படி செய்வது நியாயமும் அல்ல என்று கூறினார்.

உறுப்பினர்களை அவரவர் இருக்கைகளுக்கு செல்லுமாறு அவர் திரும்ப திரும்ப கேட்டுக் கொண்டார். ஆனால், அதை யாரும் கேட்க வில்லை. இதனால், முதலில் நேரடி ஒளிபரப்பை நிறுத்தச்சொன்ன வெங்கையா நாயுடு, பின்னர், சபையை பகல் 12 மணி வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

பகல் 12 மணிக்குச் சபை கூடியபோது, அ.தி.மு.க. உறுப்பினர்கள் மீண்டும் பிரச்சினை எழுப்பினர். அதற்கு சபை துணைத்தலைவர் ஹரிவன்ஷ், கேள்வி நேரத்தை நடத்த விடுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், அ.தி.மு.க. உறுப்பினர்கள் சபையின் மையப்பகுதிக்கு சென்று கோஷமிடத் தொடங்கினர். அவர்களுடன் தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர்களும் சேர்ந்து கொண்ட னர். தேர்வை ரத்து செய் என்று கோஷமிட்டனர்.

அதற்கு சபை துணைத் தலைவர் ஹரிவன்ஷ், மத்திய தொலைத்தொடர்பு துறை மந்திரியிடம் சபைத்தலைவர் இது குறித்து பேசி உள்ளார். புதன்கிழமை (நேற்று) சபையில் விளக்கம் அளிக்க அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார் என்று தெரி வித்தார். நாடாளுமன்ற விவகாரத்துறை இணை மந்திரி வி.முரளிதரனும் அதே கருத்தை கூறினார். இருப்பினும், அமளி நீடித்ததால், சபையை 15 நிமிட நேரத்துக்கு ஹரிவன்ஷ் ஒத்திவைத்தார்.

அதற்கு பிறகு சபை கூடியபோதும், தமிழக உறுப்பினர்கள் சபையின் மையப்பகுதிக்கு சென்று கோமிட தொடங்கினர். இந்த தடவை அவர்களுடன் காங்கிரஸ் உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டனர். இதனால், சபையை பிற்பகல் 2 மணி வரை ஹரிவன்ஷ் ஒத்திவைத்தார்.

பிற்பகல் 2 மணிக்கு சபை கூடிய நிலையில், அமளி காரணமாக, 30 நிமிட நேரம் ஒத்தி வைக் கப்பட்டது.

பின்னர், சபை கூடியபோது, மத்திய சட்டம் மற் றும் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் சபைக்கு வந்தார். தபால் துறை தேர்வு ரத்து செய்யப்படுவதாக அறிவித்தார். 'அவர் பேசியதாவது: –

தமிழ்நாட்டை சேர்ந்த என்னுடைய நண்பர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள் இந்த சபையில் சில குறிப்பிட்ட பிரச்சினைகளை எழுப்பி உள்ளனர். அந்த பிரச்சினையை உடனே ஆய்வு செய்தேன். அதன்படி, கடந்த 14ஆம் திகதி நடந்த தபால் துறை தேர்வை ரத்துச் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் உள்ளிட்ட அனைத்து மாநில மொழிகளிலும் இந்தத் தேர்வு புதிதாக நடத்தப்படும்.

இந்தச் சபைக்கும், நாட்டுக்கும் நான் தெரி வித்துக்கொள்கிறேன். தமிழ் உள்ளிட்ட அனைத்து மாநில மொழிகள் மீதும் நரேந்திர மோடி தலை மையிலான அரசு மரியாதை வைத்துள்ளது. தமிழ் நாட்டில் தேர்தல் பொறுப்பாளராக பணியாற்றிய போது, தமிழ் மொழியின் ஆழத்தை நானே உணர்ந்தேன். எனவே, அனைத்து மாநில மொழிகளையும் மதிக்கும் இந்த அரசின் உறுதிப் பாடு முழுமையானது, உண்மையானது. இவ்வாறு ரவிசங்கர் பிரசாத் கூறினார். அவரது விளக்கம், தமிழக உறுப்பினர்களுக்கு திருப்தி அளித்தது. அவருக்கு நன்றி தெரிவித்து பேசினர். (ஐ)

# திருமணமாகி 24 மணி நேரத்தில் மனைவியை முத்தலாக் கூறி விவாகரத்து செய்த கணவர்

உத்தரபிரதேசம் மாநிலத் தில் முஸ்லிம் ஒருவர், திரு மணமாகி 24 மணி நேரத்தில் மூன்று முறை 'தலாக்' எனக் கூறி மனைவியை விவாக ரத்து செய்துள்ளார்.

கணவன்மார்கள், 'தலாக்' என்று உடனுக்குடன் 3 தடவை கூறி விவாகரத்து செய்கின் றமையைத் தடை செய்யும் நோக்கத்தில், முத்தலாக்தடைச் சட்டத்துக்கான பிரேரணை மோடியின் முன்னைய ஆட் சிக்காலத்தில் கொண்டு வரப் பட்டது.

மக்களவையில் பிரேரணை நிறைவேறியது. ஆனால், மாநிலங்களவையில், பா.ஜ.க. கூட்டணிக்கு பெரும்பான்மை இல்லாததால், அப்பிரேரணை அப்க்கு நிறைவேறாமல் நிலு வையில் இருந்தது. இதனால் முத்தலாக் தடை அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையே மக்களவை யின் பதவிக்காலம் முடிவ டைந்து, மக்களவை கலைக் கப்பட்டதால், முத்தலாக் தடை பிரேரணை காலாவதி ஆனது. இதனால் நடப்பு நாடாளு மன்ற கூட்டத் தொடரில், முத்த லாக் பிரேரணை மீண்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த பிரேரணை மீது விவா தம் நடத்தப்பட்டு, விவாதத் தின் முடிவில் வாக்கெடுப்பு நடத்தப்படும் என கூறப்பட்டுள் ளது.

இந்நிலையில், உத்தர பிரதேசத்தில் ஒருவர் முத்த லாக் கூறி தனது மனைவியை விவாகரத்து செய்துள்ளார்.


உத்தரபிரதேசம் மாநிலத் தின் ஜகாங்கீராபாத் பகுதி யைச் சேர்ந்தவர் ஷாகே ஆலம். இவருக்கும் ருக்சானா பேகம் என்பவருக்கும் கடந்த 13 ஆம் திகதி திருமணம் நடத்தப்பட்டது. திருமணத்துக்கு முன் வரதட் சணையாக பைக் ஒன்றை மாப்பிள்ளை கேட்டுள்ளார்.

இதற்கு ஒப்புக் கொண்ட ருக்சானாவின் வீட்டாரால், பைக்கை கொடுக்க முடிய வில்லை. இதையடுத்து திரு மணமாகி 24 மணி நேரத்தில் ருக்சானாவுக்கு மூன்று முறை தலாக் கூறி விவாகரத்து செய் வதாக கூறியுள்ளார் ஆலம்.

இதனால் ருக்சானவும், அவரது வீட்டாரும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். இதனையடுத்து ருக்சானா வின் தந்தை, ஆலம் மற்றும் அவரது வீட்டார் மீது வரதட்ச ணைக் கொடுமைச் சட்டத் தின் கீழ் வழக்குப்பதிவு செய் துள்ளனர்.

இந்த வழக்கு குறித்து விசாரித்து வருவதாகவும், விசாரணை முடிந்தவுடன் உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நடிகர் விவேக்கின் தாயார் காலமானார்



பிரபல தமிழ் திரைப்பட நடிகர் விவேக்கின் தாயார் மணியம்மாள் (வயது 86) காலமானார்.

மாரடைப்பின் காரண மாக இவர் சென்னையில் நேற்றுக் காலமானார்.

தமிழ்திரைப்பட உலகின் சிறப்பான நகைச்சுவை நடி கர்களுள் ஒருவர் விவேக். இவரது நகைச்சுவை இலஞ் சம், மக்கள் தொகைப் பெருக் கம், அரசியல் ஊழல்கள், மூட நம்பிக்கை போன்ற வற்றை எடுத்துரைப்பதால் இவரைச் சிலர் 'சின்னக் கலைவாணர்' என்றும், 'மக் களின் கலைஞர்' என்றும் அழைக்கின்றனர்.

1990ஆம் ஆண்டின் தொடக்கத்தில் துணை நடி கராக தமிழ் திரையுலகில் நடிக்கத் தொடங்கிய இவர், தற்போது புகழ்பெற்ற நடி கராக உள்ளார். பெரும்பா லான திரைப்படங்களில் கதா நாயகனின் நண்ப னாக வேடம் ஏற்று நடித்துள் ளார்.

விவேக்கின் சொந்த ஊர் மதுரை ஆகும். அங்கையா பாண்டியன் – மணியம்மாள் ஆகியோர் இவரது பெற்றோர். விவேக்கின் தாயார் சென் னையில் வசித்து வந்தார். அவர் நேற்றுக் காலமானார்.

இந்நிலையில், சங்கரன் கோவில் அருகே உள்ள சொந்த ஊரான பெருங் கோட்டூர் கிராமத்தில் இன்று இவரது உடல் நல்லடக்கம் செய்யப்படுகிறது. (ஐ)

# தலீபான்கள் - இராணுவம் மோதலில் சிக்கி ஆப்கனில் அப்பாவிகள் 76 பேர் உயிரிழப்பு

காபூல்,ஜூலை18

ஆப்கானிஸ்தானில் தலீபான்கள் மற்றும் இராணுவத்தினர் இடையிலான மோதலில் அப்பாவி மக்கள் 76 பேர் பலியாகினர்.

ஆப்கனில் தலீபான்களை ஒடுக்க ஆப் கானிஸ்தான் அரசு படைகளும், அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளும் போராடி வருகின் றன.



அதே சமயம் மறுமுனையில், ஆப் கானிஸ்தானில் அமைதியை ஏற்ப டுத்த அமெரிக்கா மற்றும் ஆப்கா னிஸ்தான் அரசு இணைந்து தலீபான் களுடன் அமைதி பேச்சை முன்னெ டுத்து வருகின்றன.

பேச்சுகள் நடந்து வரும் அதே வேளையில் தலீபான்களின் பயங்கர வாத தாக்குதல்களும், இராணுவத் தின் பதிலடி தாக்குதல்களும் தொடர்ந்து வருகின்றன. அரசு படைகளுக்கும், தலீபான்களுக்கும் இடையி லான இந்த மோதலில் அப்பாவி மக்களே அதிகம் கொல்லப்படு கிறார்கள்.

இந்த நிலையில் உருஸ்கான் மாகா ணத்தில் தலீபான் பயங்கரவாதிகளின் நிலைகளை குறிவைத்து நள்ளிரவில் அரசு படைகள் வான்தாக்குதல் நடத் தியபோது, பொதுமக்களின் குடியி ருப்பு பகுதியில் குண்டுகள் விழுந்தன.

இதில் பெண்கள் உள்பட அப்பாவி மக்கள் 35 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

அதே போல் காந்தகார் மாகா ணத்தில் உள்ள காக்ரெஸ் மாவட்டத்தில் பாதுகாப்பு படை வீரர்களைக் குறி வைத்து தீவிரவாதிகள் நடத்திய வெடி குண்டு தாக்குதலில் 4 பெண்கள் மற் றும் 2 சிறுவர்கள் உள்பட 11 பேர் உடல் சிதறி உயிர் இழந்தனர். மேலும் முப்பதுக்கும் மேற்பட் டோர் படுகாயம் அடைந்தனர்.

இதற்கிடையே அதே மாகா ணத்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற பஸ் ஒன்று சாலையோரம் தீவிரவாதிகள் புதைத்து வைத்திருந்த வெடி குண்டில் சிக்கி, வெடித்து சித றியதில் 30 பேர் சம்பவ இடத் திலேயே பலியாகினர்.

இப்படி அரசு படைகளின் வான்தாக்குதலிலும், பயங்கர வாதிகள் நடத்திய குண்டு வெடிப்பில் சிக்கியும் 24 மணி நேரத்தில் மட்டும் அப்பாவி மக் கள் 76 பேர் பலியாகி இருக்கிறார் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வெவ்வேறு சம்பவங்களில் அப் பாவி மக்கள் கொல்லப்பட்டமைக்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ள அதி பர் அஷ்ரப் கனி, உயிர் இழந்தவர் களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

## உலகக் கிண்ணக் கிரிகெட் வெற்றியை நடனமாடி கொண்டாடிய பிரதமர் மே!




உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணியின் வெற்றியை அந் நாட்டு பிரதமர் தெரசா மே நடனமாடிக் கொண்டாடினார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் நியூ ஸிலாந்து அணியை வீழ்த்தி இங்கி லாந்து கிண்ணத்தைத் தட்டிச் சென் றது.

இதனைக் கொண்டாடும் வகையில் ஹென்லே என்ற பெயரில் கொண் டாட்டங்கள் நடந்தன. அப்போது யாரும் எதிர்பாராத நேரத்தில் பிரதமர் தெரசா மே தனது கணவருடன் நடனமாடி னார்.

கடந்த சில தினங்களாக கால் வலி யால் தெரசா மே அவதிப்பட்டு வந்த நிலையில் அவர் ஆடிப் பாடியமை பொதுமக் களை உற்சாகத்தில் ஆழ்த்தியது.

(உ)

## ஒரு நபர் பயணம் செய்யும் ‘ட்ரோன் விமானம்’ தயார்



அமெரிக்காவில் தனி ஒரு நபர் பயணம் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள விமானத்தின் செயல் முறை விளக்கம் நடந் தது.

டெக்ஸாஸ் பகுதி யில் உள்ள லிங்க் என்ற நிறுவனத்தின் சார்பில் ட்ரோன் வகை யைச் சேர்ந்த விமானம் தயா ரிக்கப்பட்டுள்ளது. ஒற்றை என் ஜின் கொண்ட - பெயரிடப்படாத - இந்த விமானத்திற்கு உள்நாட்டு விமான ஒழுங்காற்று அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

196 கிலோ எடை கொண்ட இந்த விமானம் 15 நிமிடங்களில் புறப்படத் தயாராகும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அறுங் கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ள இந்த இலகு ரக விமானத்தை அடுத்த ஆண்டு முதல் செயல்பாட்டுக்குக் கொண்டு வர முயன்று வருவதாக லிங்க் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(உ)

## இந்தோனேசியாவில் மீண்டும் மிக சக்திவாய்ந்த நிலநடுக்கம்

### கோவில்கள், வீடுகள் இடிந்து சேதம்

ஜகார்த்தா, ஜூலை18

இந்தோனேசியாவில் மீண்டும் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால், கோவில்கள் இடிந்து சேதமடைந்தன.

புவியியலமைப்பின்படி பூமியின் ‘நெருப்புக் கோளம்’ என்றழைக்கப்படும் பகுதி யில் இந்தோனேசியா அமைந் துள்ளது. இதனால், அந்நாட் டில் அடிக்கடி நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன.



இந்த நிலையில் இந்தோ னேசியாவின் பாலி, கிழக்கு ஜாவா, லோம்புக் ஆகிய தீவு பகுதிகளில் நேற்று முன்தினம் அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச் டர் அளவுகோலில் 5.7 புள்ளிகளாக பதி வான இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 91 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந் தது.

நிலநடுக்கத்தால் வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் அதிர்ந்தன. இதனால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மக்கள் திடுக்கிட்டு எழுந்தனர். பின்னர் அவர்கள் அலறியடித்த படி வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

இந்த நிலநடுக்கம் காரணமாக பாலியில் உள்ள கோவில்கள் மற்றும் வீடுகள் உள் ளிட்ட கட்டடங்கள் இடிந்து சேதம் அடைந் தன. இந்த நிலநடுக்கத்தினால் உயிரி ழப்போ அல்லது யாரும் காயம் அடைந்த தாகவோ தகவல்கள் இல்லை.

முன்னதாக, இந்தோனேசியாவின் கிழக்கு பகுதியில் உள்ள மலுக்கு தீவில் ஞாயிற்றுக்கிழமை ரிச்டர் அளவுகோலில் 7.3 புள்ளிகளாக சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதும், இதில் 2 பேர் பலியானமையும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## இராணுவ வீரரைத் தாங்கி அந்தரத்தில் பறந்த கருவி!

### பிரான்ஸில் மக்கள் ரசித்த அதிசயம்

பாரீஸ்,ஜூலை18

பிரான்ஸில், அந் தரத்தில் பறந்து இரா ணுவ வீரர் செய்த சாக சத்தைக் கண்டு பார் வையாளர்கள் வியப் பில் ஆழ்ந்தனர்.



பிரான்ஸில் ஒவ் வொரு ஆண்டும் ஜூலை 14 ஆம் திகதி தேசிய தினமாக கொண் டாடப்படுகிறது. இதை யொட்டி பாரீஸில் இராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இதில் அதிபர் மெக்ரான் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதி கள் பங்கேற்றனர். அப்போது அங்கு விசித்திரமான காட்சி ஒன்று அரங்கேறியது.

சிறிய ஜெட் எந்திரத்தில் நின்ற படி கருப்பு நிற உடையணிந்த ஒருவர் துப்பாக்கியுடன் அந் தரத்தில் பறந்து வட்டமடித்தார். இராணுவ வீரரான பிரான்கி ஜபாதா என்பவர்தானே தயாரித்த ‘பிளைபோர்ட்’ என்ற ஜெட் பவர் எந்திரத்தில் பறந்து சாகசத்தில் ஈடுபட்டார்.

இது பார்வையாளர்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. தாங்கள் பார்ப்பது கனவா, நிஜமா என்று புரியாமல் வியப்புடன் மக்கள் பார்த்து ரசித்தனர்.

பலர் ஆர்வத்துடன் தங்களது செல்போனில் புகைப்படம் மற் றும் வீடியோ எடுத்தனர். அதிபர் மெக்ரான் இது தொடர்பான வீடியோவை டுவிட்டரில் பதி விட்டு, நவீனம் மற்றும் புதுமை யான தங்களது இராணுவத் தால் பெருமை அடைகிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 2 வருடங்களில் அரசியல் தீர்வு!

# ரணிலின் வெடி!!

இலங்கைத்தீவில் தலையெடுத்துவிட்ட தேர்தல் காய்ச்சலால் நாட்டுக்குள் இருக்கும் அரசியல்வாதிகள் பரபரப்படைந்த நிலையில் காட்டுக்குள் இருக்கும் ஆதிவாசிகளின் தலைவர் ஊருவ ரிட்டே வன்னிலா அத்தோவுக்கும் இந்தக் காய்ச்சல் பீடித்ததால் அவரும் எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் களத்தில் குதிக்கப்போவதான செய்தியை யாரோ புண்ணியவான்கள் கொளுத்திப்போட்டுவிட்டார்கள்.

ஆனால் இலங்கைத்தீவின் பழங்குடிகளில் ஒரு குடியாக கருதப்படும் இந்த வேடுவர் சமூகத்தில் இருந்து அதன் தலைவருக்கு வந்த ஆசையொன்றும் தீண்டத்தகாத ஆசையல்ல. ஆசையே துன்பங்களுக்கு அடிப்படைகாரணம் என தத்துவம் உரைத்த பௌத்தத்தின் பெயரால் சண்டியர் பிக்குகளும் குண்டக்க மண்டக்க காவிகளும் அரசியல் அதிகாரங்களுக்காக ஆசைப்படும்போது வன்னிலா அத்தோவுக்கு அரசியல் ஆசை கூடாதென மறுத்துரைக்க யாருக்கும் தார்மீகமும் இல்லை.

எனினும் நாட்டில் பரவிய இந்தச்செய்தி இறுதியில் காட்டுக்கும் போனதால் பதறிய அத்தோவுக்கு பதுளை பிரதேசததுக்கு ஊடகங்களை வர வழைத்து, தான் தேர்தலில் போட்டியிடப்போகிறார் எனக் கொளுத்திப் போடப்பட்ட செய்திகள் பொய்யானது என சொன்னார்.

அத்துடன் காட்டுக்குள் வாழும் ஆதிவாசிகளின் தலையாகதான் இருந்தாலும் நாட்டுக்குள் வாழும் அரசியல் விலங்குத்தலைகளுக்காக நச்சென்று ஒரு செய்தியையும் சொன்னார்.

அதாகப்பட்டது, நாட்டு மக்களுக்கு தற்போது அரசியல் என்பது அருவருப்பான விடயமாக மாறிவிட்டது. இதனால், எந்த கட்சியாக இருந்தாலும், நாடு குறித்து சிந்திக்கும் தலைவர் ஒருவரே அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதே வன்னிலா அத்தோவின் செய்தி. ஆனால் காட்டில் இருப்பவர் நாட்டின் அரசியல் நாகரிகம் குறித்து சிந்தித்தாலும் நாட்டில் இருக்கும் முதன்மைத் தலையாரியோ அரசியல் ராஜரீகங்களைத் துறந்து மரணதண்டனை போன்ற கற்கால சிந்தனைகளுடன் நகர முனைகிறார்.

அந்தவகையில் மரண தண்டனை நிறைவேற்றத்துக்கு ஆப்பு வைக்குவகையில் யாராவது நாடாளுமன்றில் பிரேரணையொன்றை கொண்டுவந்தால் அவ்வாறாக பிரேரணை கொண்டுவரப்படும் தினத்தை தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்துவேன் எனவேறு அவர் பிதற்றுகிறார்.

அடக்கடவுளே! தனக்கு ஒரு பிரேரணை பிடிக்கவில்லை என்பதற்காக, நாடாளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் அது குறித்து ஒரு பிரேரணையை கொண்டுவந்தால் அந்த நாளை தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்துவேன் எனக்கூறி தேசிய துக்க தினம் என்ற கருப் பொருளையே மலினமாக்கும் அளவுக்கு இந்த உலகில் ஒரு நாட்டின் தலைவர் ஒருவர் இருக்கின்றார் என்றால் அது சாட்சாத் சிறிலங்கா ஜனநாயக குடியரசில்தான் இருக்கமுடியும்.

அதுசரி.. இலங்கைத்தீவில் 2009 இல் ஒரு தேசிய இனமே படுகொலைக்கு உள்ளாகிய போது அதனை பாற்சோறு பொங்கி வெடி கொளுத்தி ஆரவாரித்த தென்னிலங்கையின் அரசியல் கலாசாரத்தில் மூழ்கித்திளைத்த முல்லாக்களுக்கும் மிஸ்டர் பீன்களுக்கும் இந்த அளவில் தானே தேசிய துக்க தினங்கள் குறித்த புரிதல்கள் இருக்கக்கூடும்.



இவ்வாறாக நாட்டில் உள்ள தலையாரி மரணதண்டனையை வாஞ்சிக்க மறுபுறத்தே இடக்குமுடக்கான கடும்போக்கு பௌத்த முகங்கள் தமக்கு பிரியமான கோட்டா போன்ற ஆட்சியாளரைக் கொண்டுவர பிரயத்தனப்படுகின்றன.

இதேபோல இலங்கையில் அதிகம் கூக்குரல் இடும்கடும்போக்கு பௌத்த முகங்கள் சிறுவயதில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான முகங்கள் என்பதாக ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கருத்தும் இப்போது யானைகளின் முகாமில்சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. பொதுபலசேனா சண்டியர் ஞானசாரர் ரஞ்சன் ராமநாயக்கா கன்னத்தில் அறை வாங்க வேண்டிய ஒரு நாலுகால் பிராணியென வர்ணிக்க அது இப்போது சிறிகொத்தாவிலும் அதிர்கிறது.

ரஞ்சன் ராமநாயக்கவின் கருத்து தனக்கு இருக்கும் பௌத்த வாக்குவங்கியை சீர்குலைக்கும் என்பதால் அச்சமடைந்த ரணில் ரஞ்சன் ராமநாயக்கவின் கருத்து, கட்சியின் தலைமைத்துவம் மற்றும் கட்சியின் கருத்திற்கு முரணானது என்பதால் அதனைத் தான் நிராகரிக்கிறார் எனவும் அது குறித்து தனக்கு விளக்க மளிக்க வேண்டும் எனவும் அவருக்கு ஒரு கடித்ததை அனுப்பியுள் ளார் எனத் தெரிகிறது.

இதற்கிடையே பௌத்த வாக்கு வங் கியை இழக்காத ரணில் போன்ற முகங்கள் தமிழ் பேசும் மக்களுக்கு கரட்துண்டுகளை எறிந்தபடி வடக்கின் ஸ்கந்தவரோதயக் கல்லூரிஅடிக்கல் வரை இன்று முன்னேறிச்செல்லும் வகையில் ஒரு கதம்ப அரசியல்களமாக இலங்கைத்தீவு மாறி விட்டது.

தமிழ்மக்களின் முற்றத்தில்; சிறிய சிறிய கம்பெரிய கல்முனை என கரட்துண்டுகளை எறியும் ரணில் இப்போது இன்னும் ஒரு படி ஏறி இரண்டு வருடங்களுக்குள் அரசியல் தீர்வை முன்வைப்பதாக ஸ்கந்தவரோதய முற்றத்தில் அறிவித்துள்ளார்.

அவரது கரட் துண்டு நீட்டலுக்கு தோதாக சிறுபான்மையின மக்களின் பெறுமதியான வாக்குகளே எதிர்வரும் அரசதலைவர் தேர்தலின் முடிவை நிர்ணயிக்கும் என்ற பழைய பல்லவிகளும் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் போன்றவர்களால் இன்று பாடப்பட்டுள்ளது.

ஸ்கந்தவரோதயா கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு தின விழாவில் ரணில் பிரதம விருந்தினராக கொலுவிருக்க தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் அருகில் அமர்ந்திருக்க இந்த பல்லவியை இழுத்து விட்டார் விஜயகலா மகேஸ்வரன்

அத்துடன் எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் சரியான முடிவை எடுப்பதன் ஊடாக கடந்த காலத்தில் விடுபட்ட விடயங்களை எதிர் காலத்தில் நிவர்த்திக்க முடியும் என்ற தனது மற்றொரு கரட் துண்டையும் தமிழ் மக்களுக்கு விட்டெறிந்திருக்கிறார்.

2015 இல் இவ்வாறு தான் மைத்திரிக்கு தமிழர்கள் வாக்களிக்க முன்னர் கூறினார்கள். அன்று தமிழர்கள் சரியான முடிவை எடுப்பதன் ஊடாக மஹிந்த காலத்தில் விடுபட்ட விடயங்களை எதிர்காலத்தில் அதாவது மைத்திரி– ரணில் காலத்தில் நிவர்த்திக்க முடியும் என்றார்கள்.

இப்போது 2019 வரை அது சாத்தியப்படாத நிலையில் மைத்திரி காலத்தில் விடுபட்ட விடயங்களை எதிர்காலத்தில் யானைகளின் முகம் ஒன்று தலையாரியாக குந்தும் காலத்தில் நிவர்த்திக்க முடியும் என நம்பிக்கை ஊட்டுகிறார்கள்.

இதற்கிடையே சிறிலங்காவின் அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறிலங்கா நாடாளுமன்றத்தில் முன் வைக்கவுள்ள ஒத்திவைப்புவேளை பிரேரணை மீது அடுத்தவாரம் விவாதங்கள் நடத்தப்படவுள்ள செய்தியையும் அவதானிக்க வேண்டும்.

ஆனால்யதார்த்தமாக நோக்கினால் இன்னும் 5 வருடங்களின் பின்னர் இதேகாலத்தில் இன்னொரு தமிழ்முகமும் இதே பாணியில் கடந்த காலத்தில் (2019?) விடுபட்ட விடயங்களை எதிர்காலத்தில் அதாவது 2025 இல் நிவர்த்திக்க முடியும் என உத்தரவாதத்தை வழங்க கிளம்பக்கூடும்.

ஆகமொத்தம் ஈழத்தமிழர்களின் அரசில் கையறு நிலையை சமகால அரசியல் ஆதாயங்களுக்கு பயன்படுத்த வீட்டுக்கு அருகில் இருக்கும் தகுதியில் யானைகளும் தவறவில்லை. அரசியல் புனுகுப்பூனைகளும் தவறுவதில்லை. எனினும் தமிழர்களுக்கு மட்டும் நீதி பிழைத்துக் கொண்டேயிருக்கும். ★

நன்றி – ஐ.பி.சி. தமிழ்

**யாழ்.போதனா வைத்தியசாலை, பிராந்திய இரத்த வங்கி ஏற்பாடு செய்திருந்த “உலகக் குருதிக் கொடையாளர் தினத்தின் பிராந்திய நிகழ்வு -2019” கடந்த சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, குருதி மாற்று பிரயோக சேவை வைத்திய நிபுணர் திருமதி செனவிரத்ன மற்றும் வைத்தியர்கள், குருதிக் கொடையாளர்கள், குருதிக் கொடை ஒழுங்கமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து குருதிக் கொடையாளர்களும், குருதிக் கொடை ஒழுங்கமைப்பாளர்களும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வின் சில பதிவுகள்... (இ)**












# 30 ஆவது வீர மக்கள் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜூலை 18

வவுனியாவில் தமிழீழ விடுதலைக் கழகத்தின் 30ஆவது வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் இன்னுயிரை இழந்த போராளிகள் மற்றும் பொதுமக்களை நினைவு கூர்ந்து கோவில் குளம் உமா மகேஸ்வரன் நினைவு இல்லத்தில் புளொட் அமைப்பினரால் நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வானது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உபதலைவரும் வவுனியா நகரசபை உறுப்பினருமான சந்திரகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றதுடன் நிகழ்வில் புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டு கழகத்தின் கொடியை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதுடன் இறந்த போராளிகள் மற்றும் பொதுமக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது உமா மகேஸ்வரன் திருஉருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு கழகத்தோழர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்த மூன்று நாள்களாக தொடர்ந்து வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ – 100)



## இன்று கன்னியா நாளை எது?

# விரைந்து செயற்பட ஒட்டுமொத்த தமிழினத்தையும் அழைக்கின்றார் தவத்திரு அகத்தியர் அடிகளார்



திருகோணமலை, ஜூலை 18

இன்று கன்னியா நாளை எது என்று தெரியாமல் எதுவுமே நடக்கும் என்ற நிச்சயமற்ற தன்மைக்குள் தமிழினம் வாழத்தள்ளப்படுகின்றது. சிங்கள – பௌத்த காலனித்துவம் இலங்கையில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலையை விரைவுபடுத்துகின்றது. இதுதொடர்பில் பரந்த கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கபட்டுத் தீர்வுகள் தொடர்பில் விரைந்து செயற்பட ஒட்டுமொத்த தமிழினத்தையும் அழைத்து நிற்கின்றோம் – இவ்வாறு தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் கோவிலின் வரலாறு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் இருப்புக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழின இருப்பிற்கும் மிக அவசியமானது. சிங்கள – பௌத்த அரசானது தமிழர் வரலாற்றை மகாவம்ச மைய வரலாறாகத் திரிபுபடுத்த முயற்சிக்கின்றது.

வரலாற்றியலைத் திரிபுபடுத்தல், புலமைசார் கற்கைநெறிகளின் ஊடாக முன்னெடுக்கப்படுவதோடு தமிழர் தாயகத்தில் பல்வேறு திணைக்களங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

சிங்கள – பௌத்தமயமாக்கலில் சைவ ஆலயங்கள் பாதிக்கப்படுகின்றமை, ஏனைய மதத்தலங்களோடு ஒப்பிடுகையில், எல்லோருக்கும் தெரிந்த தரவு ரீதியில் நிறுவப்பட்ட உண்மை.

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் மிகப் பெரும் அளவில் சிங்கள – பௌத்த மயமாக்கம் குறிப்பாக பின் – முள்ளிவாய்க்கால் தளத்தில் மிக வீரியமாக முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அது தொடர்பான எதிர்வினை, நேர் மறையான, கூட்டு தந்திரோபாய நகர்வுகள் தமிழ் அரச தரப்பிலோ அல்லது தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் இடையேயோ இருப்பதாகத் தெரியவில்லை.

சிங்கள – பௌத்த ஆக்கிரமிப்பிற்கு எதிரான பின் – முள்ளிவாய்க்கால் வரலாற்றுத்தளத்தில் மிகச் சிறிய எதிர்வினை முயற்சிகள் அடித்தள மக்களால் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதோடு இவ் எதிர்வினை நடவடிக்கைகள் பெரியளவில் தமிழ் மக்கள் அரசியல் உரிமை சார்ந்து மாற்றத்தை கொண்டுவந்ததா என்பதை ஆராய வேண்டிய தேவை உள்ளது கடந்த ஒரு தசாப்தமாக.

இவ்வாறான எதிர்வினைகளை ஒரு சமூக இயக்கமாக மாற்றுகின்ற தலைமைத்துவ வெளி இன்னும் வெறுமையாகவே உள்ளது.

சிங்கள – பௌத்த காலனித்துவத்திற்கு எதிரான நிறுவனமயமாக்கப்பட்ட தந்திரோபாய நகர்வுகள் கட்டமைக்கப்படும் வரை காலனித்துவம் இன்னும் அகலமாக விரிந்துகொண்டேபோகும்.

இன்று கன்னியா பிள்ளையார் கோவில் நாளை கோணேசர் கோவிலாகவும் இருக்கலாம். இந்த சிங்கள – பௌத்த அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தை தமிழ் அரசியல் தலைமைகள் இல்லை என்று நிராகரிக்க முடியாது. இவ்வாறான சிங்கள – பௌத்த அரசியல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு எதிரான மாற்றுவழியை தமிழ் அரசியல் தலைமைகள் முன்வைக்காதமை அவர்களின் பொறுப்புக்கூறலிலிருந்து நழுவுவதாக அமையும்.

கன்னியா பிள்ளையார் கோவில் தொடர்பில் பலதரப்பினரிடம் இது பற்றி கலந்துரையாடி உள்ளோம். அதுபற்றிய குறுகிய, நீண்டகால விளைவுகள் பற்றியும் தமிழின இருப்பின் கேள்விக்குட்படுதல் பற்றியும் பல்வேறுதளங்களில் வெளிப்படுத்தி உள்ளோம். ஆனால் இதுவரைக்கும் அசமந்தபோக்கு கடைப்பிடிக்கப்படுவது இது தொடர்பில் மத்தியஸ்தம் வகிப்பவர்களின் வகிபங்கை சந்தேகம் கொள்ளச் செய்கின்றது.

இனியும் இவ்வாறான நிலைமை தொடரும் என்றால் மக்கள் மயப்படுத்தப்பட்ட வன்முறையற்ற தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். மக்கள் மைய முன்னெடுப்புப் போராட்டங்கள் சிங்கள – பௌத்த காலனித்துவத்திற்கு தீர்வாக அமையும் என்றால் அவற்றை ஒழுங்குபடுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறான போராட்ட முனைப்புக்கள் நாங்கள் வேறு இன மதமக்களுக்கு எதிரானவர்கள் இல்லை என்பதற்கு அப்பால் தமிழின இருப்பை உறுதிப்படுத்துவதோடு இலங்கையின் பல்லினத் தன்மையையும் தொடர்ந்து பேணுவதற்கு உறுதிசெய்யும்.

இன்று கன்னியா நாளை எது என்று தெரியாமல் எதுவுமே நடக்கும் என்ற நிச்சயமற்ற தன்மைக்குள் தமிழினம் வாழத்தள்ளப்படுகின்றது.

சிங்கள – பௌத்த காலனித்துவம் இலங்கையில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை விரைவுபடுத்துகின்றது. இதுதொடர்பில் பரந்த கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுத் தீர்வுகள் தொடர்பில் விரைந்து செயற்பட ஒட்டுமொத்த தமிழினத்தையும் அழைத்து நிற்கின்றோம் – என்றுள்ளது. (ஜ)

# ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புள்ள அனைவருக்கும் தூக்கு!

## ஜனாதிபதி மைத்திரிபால வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 18

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. அவர்களுக்கெதிராக தெளிவான சாட்சிகள் உள்ளன. சட்டத்திற்கு அமைவாக அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன் தினம் பெலேந்த ரஜமகா விகாரையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தாது கோபுரம், நூல் நிலையம் மற்றும் சமய உரை மண்டபம் ஆகிய வற்றை மகாசங்கத்தினரிடம் கையளிக்கும் புண்ணிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

தூக்குத் தண்டனையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் சட்டவரைவொன்றைக் கொண்டுவருவதற்கு எடுக்கப்படும் முயற்சி ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற அழிவுகளின் மூலம் சுமார் 300 அப்பாவி மக்களின் உயிர்களைப் பலியெடுத்த கொடூர பயங்கரவாத நடவடிக்கைக்கு வகை கூறவேண்டியவர்களுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனையைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் முயற்சியாகுமென நான் நம்புகின்றேன்.

நாட்டின் குற்றவியல் சட்டத்திற்கேற்ப கொலை, இராஜ துரோகம் போன்று பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக குற்றவாளியாக இனங்காணப்பட்டால் தூக்குத் தண்டனை வழங்கப்படுமென்பதுடன், தூக்குத் தண்டனையை நீக்குவதற்கு அரசில் உள்ள சிலர் எடுக்கின்ற முயற்சியின் மூலம் எந்தவொரு குற்றவாளிக்கும் தண்டனை வழங்க முடியாது.

மத்திய வங்கிக் கொள்ளைக்குப் பொறுப்பான அனைத்து வகை கூற வேண்டியவர்களும் தற்போது இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாட்டுக்கு வெளியே உள்ளவர்களுக்கு சர்வதேசப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்குக் கொண்டு வருவதற்காக நான் சிங்கப்பூர் பிரதமருடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடியிருக்கின்றேன். இந்த அனைத்து விசாரணை நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற



பயங்கரவாதத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. அவர்களுக்கெதிராக தெளிவான சாட்சிகள் உள்ளன. சட்டத்துக்கு அமைவாக அவர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கு அரச நிர்வாகத்தில் தண்டனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். தண்டனைக்கு பயப்படுவதன் மூலம் சமூகத்தில் குற்றங்கள் குறைந்து சிறந்த தொரு நாட்டையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப முடியும் – என்றார். (ஜ)

northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388

# ஆறு ஓட்டங்கள் வழங்கியமை தவறு!




உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் வழங்கப்பட்ட தீர்ப்பைப் பிரபல முன்னாள் போட்டி நடுவர் சைமன் டோபல் கடுமையாக விமர்சித்துள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இங்கிலாந்து அணியும், நியூஸிலாந்து அணியும்மோதிக்கொண்ட இறுதிப்போட்டியில், நியூஸிலாந்து அணி வெற்றி இலக்காக 242 ஓட்டங்களை நிர்ணயம் செய்தது.

இந்த வெற்றி இலக்கை அடைய பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, போட்டியின் இறுதி ஓவரின் கடைசி மூன்று பந்துகளிலும் வெற்றிபெற 9 ஓட்டங்கள் தேவைப்பட்டமை. இதன்போது, போட்டியின் இறுதி ஓவரின் நான்காவது பந்தில் வித்தியாசமான முறையில் 6 ஓட்டங்கள் பெறப்பட்டன.

இறுதி ஓவரின் நான்காவது பந்தாக ட்ரென்ட் போல்டினால் வீசப்பட்ட பந்தை எதிர்கொண்ட பென் ஸ்டோக்ஸ், பந்தினை டீப் மிட் விக்கெட் திசையில் அடித்து இரண்டு ஓட்டங்கள் பெற முயன்றார். அப்போது இரண்டாவது ஓட்டம் பெற முயன்றபோது நியூசிலாந்து வீரர் மார்டின் குப்தில் ரன் அவுட் செய்யும் முனைப்போடு பந்தை விக்கெட்டை நோக்கி எறிந்தார். எனினும், ரன் அவுட்டுக்காக வீசப்பட்ட பந்து ஸ்டோக்ஸின் துடுப்பு மட்டையில் தவறுதலாகப் பட்டு பௌண்டரி எல்லையைத் தாண்டியது.

இதனால், குப்தில் வீசிய பந்துக்கு நான்கு ஓட்டங்கள் வழங்கி பென் ஸ்டோக்ஸ் பெற்றுக் கொண்ட இரண்டு ஓட்டங்களுடன் சேர்த்து இறுதி ஓவரின் நான்காவது பந்தில் மொத்தமாக 6 ஓட்டங்களை மைதான நடுவர்கள் வழங்கினர்.

இந்த நிலையில், போட்டி நடுவர்கள் ஆறு ஓட்டங்கள் வழங்கியது தவறு என்றும் இந்தச் சம்பவத்திற்கு மொத்தம் ஐந்து ஓட்டங்களே இங்கிலாந்து அணிக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், இறுதி ஓவரின் ஐந்தாவது பந்தை பென் ஸ்டோக்ஸ் அல்லாமல் ஏனைய துடுப்பாட்ட வீரராகக் களத்தில் இருந்த அடில் ரஷித்தே எதிர்த்தாடியிருக்கவேண்டும் எனவும் ஐ.சி.சி. இன் சிறந்த போட்டி நடுவருக்கான விருதை ஐந்து தடவைகள் வென்றிருக்கும் ஆஸ்திரேலியாவை சேர்ந்த சைமன் டோபல், குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இங்கிலாந்து அணிக்கு ஐந்து ஓட்டங்களே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆறு ஓட்டங்கள் அல்ல. இது சரியற்ற தீர்மானத்தினால் ஏற்பட்ட தெளிவான தவறு என தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஆறு ஓட்டங்கள் வழங்கப்பட்டமை தவறு என்பதை கிரிக்கெட்டின் விதிமுறைகளை தீர்மானிக்கும் மெரில்போன் கிரிக்கெட் கழகத்தின் கிரிக்கெட் விதிமுறைகளில் இருந்து அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இவ்வாறு 6 ஓட்டங்கள் வழங்கப்பட்ட காரணத்தினால், இறுதி ஓவரின் இறுதி இரண்டு பந்துகளுக்கும் 3 ஓட்டங்கள் தேவைப்பட பென்ஸ்டோக்ஸ் இரண்டு பந்துகளிலும் இரண்டு ஓட்டங்கள் பெற்று உலகக் கிண்ண இறுதிப் போட்டியை சமநிலை செய்திருந்தார்.

பின்னர் சுப்பர் ஓவர் முறை வழங்கப்பட்டது. அதிலும், இரண்டு அணிகளும் சமமான ஓட்டங்களையே எடுத்தன.

இதனால், பவுண்டரி எண்ணிக்கை அடிப்படையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இந்த விதியின்படி போட்டியில் அதிக பவுண்டரிகள் அடித்த அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். இந்த விதியின்படி, அதிக பவுண்டரிகள் அடித்த இங்கிலாந்து அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ஐ)




# சமோவாவிடம் போராடி தோற்றது இலங்கை அணி

வலைப்பந்து உலகக் கிண்ணத் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற சமோவா அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை வலைப்பந்து அணி 65-55 என்கிற புள்ளிகள் கணக்கில் தோல்வியடைந்துள்ளது.

இங்கிலாந்தில் இடம் பெறும் 15ஆவது வலைப் பந்து உலகக் கிண்ணத் தொடரில் இரண்டாம் சுற்றில் விளையாடும் சந்தர்ப்பத்தை இலங்கை வலைப் பந்து அணி இழந்துள்ளது.

எனினும், தொடரில் 13 தொடக்கம் 16 வரையிலான இடத்தை பெறும் அணிகளைத் தெரிவு செய்யும் சுற்றில் ஆடும் சந்தர்ப்பத்தை இலங்கை வலைப்பந்து அணி பெற்றுள்ளது.

இந்த சுற்றில் இலங்கை அணி நேற்று முன்தினம் சிங்கப்பூர் வலைப்பந்து அணியினை88-50என்கிற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்த நிலையில் நேற்று சமோவா அணியினை எதிர் கொண்டது.

இந்தப் போட்டியில் இலங்கை அணி முதல் சுற்றை 17-13 என்கிற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றியது.

எனினும், போட்டியின் இரண்டாம் சுற்றில் சமோவா வலைப்பந்து அணி திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அதனை 19-10 என்கிற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

இதனால், போட்டியின் முதல் அரைப்பகுதியிலும் சமோவா 32-27 என்கிற புள்ளிகள் கணக்கில் முன்னிலை பெற்றுக் கொண்டது.

அதனை அடுத்து போட்டியின் மூன்றாம் சுற்றையும் சமோவா அணியே 17-13 என தம்வசமாக்கியது.

பின்னர் போட்டியின் இறுதிச் சுற்றிலும், சிறப்பாகச் செயற்பட்ட சமோவா அணி 16-15 என்கிற புள்ளிகள் கணக்கில் அதனைக் கைப்பற்றியதால் 65-55 என்கிற புள்ளிகள் கணக்கில் போட்டியில் வெற்றி பெற்றது.

இலங்கை வலைப்பந்து அணியின் சார்பில் 58 முயற்சிகளில் 52 புள்ளிகள் பெற்ற தர்ஜினி சிவலிங்கம் போட்டியில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற வீராங்கனையாக மாறினார். (ஐ)



# பங்களாதேஷ் அணி அறிவிப்பு

இலங்கை தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசனுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. மோர்டசா அணித் தலைவராக தொடர்ந்தும் நீடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 ஆவது உலகக் கிண்ணத் தொடரில் லீக் சுற்றோடு பங்களாதேஷ் அணி வெளியேறியது. இத்தொடருக்குப் பின் பங்களாதேஷ் அணி முதல் சுற்றுப் பயணமாக இலங்கைக்கு வருகின்றது.

எதிர்வரும் 26, 28 மற்றும் ஜூலை 31 ஆம் திகதி மூன்று ஒரு நாள் போட்டிகள் கொழும்பு பிரேமதாச விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

இதற்கான பங்களாதேஷ் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. உலகக் கிண்ணத்தொடரில் அபாரமாக விளையாடிய ஷகிப் அல் ஹசனுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

விக்கெட் காப்பாளர் லின்டன் தாஸ் தனிப்பட்ட காரணத்திற்காக தொடரில் இருந்து விலகியுள்ளார்.

லீக் சுற்றோடு அந்த அணி வெளியேறினாலும், அணித் தலைவர் பதவியில் இருந்து மோர்டசா நீக்கப்படவில்லை. இலங்கை தொடருக்கான பங்களாதேஷ் அணிக்கும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம் - 1. மஷ்ரபீ மோர்டசா, 2. தமிம் இக்பால், 3. சவுமியா சர்கர், 4. அனாமுல் ஹக்யூ, 5. முகமது மிதுன், 6. முஷ்பிகுர் ரஹிம், 7. மெஹ்முதுல்லா ரியாத், 8. மொசாடெக் ஹொசைன், 09. சபீர் ரஹ்மான், 10. மெஹிதி ஹசன், 11. தைஜுல் இஸ்லாம், 12. ருபெல் ஹொசைன், 13. முகமது ஷாய்புதின், 14. முஸ்டாபிஜுர் ரஹ்மான். (ஐ)

## நீராவியடிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 6ஆம் திகதி நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் 108 பானைகளில் பிரம்மாண்ட பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. இந்த பொங்கல் நிகழ்வின் போது ஆலயச் சூழலை அலங்கரிப்பதற்காக ஆங்காங்கே வீதியின் ஓரமாக வீதியின் மேலாகவும் நந்திக் கொடிகள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் இந்த நந்திக் கொடிகள் அறுத்து எறியப்பட்டுள்ளன. அத்தோடு அந்த நந்திக்கொடிகளை கட்டியிருந்த கம்பங்கள் பிடுங்கி ஓரிடத்தில் அடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரால் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் தமது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகச் செயலாளர் சி.ராஜா,

நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் பௌத்த பிக்கு ஒருவர் அடாத்தாக குரு கந்த ரஜமகா விகாரை என்னும் பெயரில் விகாரை அமைத்து பிரம்மாண்ட புத்தர் சிலை ஒன்றையும் அமைத்துள்ளார்.

இந்த நிலையில் இந்தச் சர்ச்சைக்குரிய விவகாரம் தொடர்பாக கடந்த மாதங்களில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பில் இரண்டுதரப்பினரும் அமைதியான முறையில் தமது ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த தீர்ப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து வவுனியா மேல் நீதிமன்றத்தில் பௌத்த பிக்கு சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு மீதான விசாரணை கடந்த சில நாட்களுக்கு முன்னர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

அன்றைய தினம் மேல்நீதிமன்றின் வழக்கு விசாரணையின் போது குறித்த எமது பிள்ளையார் ஆலய பகுதியில் ஆலய நிர்வாகத்தினரோ பௌத்த பிக்குவோ எவ்வாறான அபிவிருத்தி வேலைகளையும் செய்ய முடியாது எனவும் ஏற்கனவே அங்கே இருக்கின்ற அமைப்புகள் அப்படியே இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதிக்கும் விதமாக பௌத்த பிக்கு எமது ஆலயத்தில் கட்டப்பட்டிருந்த அந்த நந்திக் கொடிகளை மிகவும் கீழ்த்தரமான முறையில் அடாத்தாக அறுத்து வீதியோரத்தில் எறிந்திருக்கின்றார் அத்தோடு 24 மணித்தியாலமும் இந்த விகாரை அமைந்துள்ள பிரதேசத்தில் பொலிஸார் கடமையில் இருக்கின்றார்கள்.

ஆலயம் இருக்கின்ற இடத்துக்கு எதிர்ப்பக்கமாக மிகவும் குறுகிய தூரத்தில் இராணுவக் காவலரண் ஒன்றை அமைத்து 24 மணி நேரமும் இராணுவத்தினர் கடமையில் இருக்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் எல்லோரும் கடமையில் இருக்கின்ற போது இந்த நந்திக் கொடிகள் அறுத்து எறியப்பட்டுள்ளன.

அடாத்தாக எமது ஆலயப் பகுதியில் வந்து தங்கியிருந்து விகாரை அமைத்துள்ள பௌத்த பிக்கு மேலும் மேலும் நீதிமன்றத்தின் தீர்ப்புகளை அவமதிக்கும் விதமாக நடந்து கொண்டிருக்கின்றதை பொலிஸாரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் செயற்பாடாகவே இந்த நந்திக்கொடிகள் அறுத்து எறியப்பட்டுள்ள சம்பவத்தை நாம் பார்க்கின்றோம் – என்றார். (ஐ)

## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வருகை தந்தார். அவர் கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வுக்கு வருகை தந்த பிரதமருக்குக் கல்லூரி மாணவர்களின் கடேற் பிரிவினரின் (ஆயுதம் தாங்கிய மாணவ சிப்பாய்கள்) வரவேற்பு அணிவகுப்பு இடம்பெற்றது.

கடேற் மாணவர் படைப் பிரிவு என்பது இலங்கை முழுவதும் உண்டு. அது யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் உண்டு. இதே கல்லூரியிலும் உண்டு. இந்தப் பிரிவினரே பிரதமரின் வரவேற்பு அணிநடையில் பயன் படுத்தப்பட்டனர். இங்கே பிரதமருக்கு ஓர் செய்தி சொல்லப்பட்டுள்ளது. தேவை ஏற்பட்டால் எமது பாதுகாப்புக்கு எப்போது வேண்டுமானாலும் நாம் ஆயுதம் தூக்கவும் தயாராகவே இருக்கின்றோம் என்பதை எமது மாணவர்கள் பிரதமரின் கண் முன்னாலேயே நிரூபித்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார். (ஐ-07)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கும் முயற்சியாக பொலிஸ் அதிகாரியின் உதவியுடன் தேரர் ஒருவரால் அங்கு பௌத்த கொடி ஏற்றப்பட்டது.

கந்தப்பளை, கோட்லொஜ் பகுதியில் உள்ள மாடசாமி காவல் தெய்வ ஆலயத்தில் பொலனறுவைப் பகுதியைச் சேர்ந்த தேரர் ஒருவரினால் இந்தப் பௌத்த கொடி ஏற்றப்பட்டது.

இதற்கு எதிராக அப்பகுதி மக்கள் இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், இது தொடர்பில் கந்தப்பளை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து நுவரெலியா பொலிஸ் வலயப் பொலிஸ் அத்தியட்சகர், நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கலந்துரையாடிய பின் கொடியை அகற்றினர். இதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர். (ஐ)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் வகையில், இந்த எண்ணெய் நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளதாக சினோபெக் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பியூவல் ஒயில் சிறிலங்கா கம்பனி லிமிட்டட் என்ற பெயரில் இந்த நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டையில் இந்த நிறுவனம் செயற்படவுள்ளது.

இந்த நிறுவனத்தினால் கப்பல்கள் மற்றும் மின்உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது. (ஐ)

## கன்னியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மனோ கணேசன் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிடுகையில் –

கன்னியாவில், விகாரை கட்டும்படி தொல்பொருளாராட்சித் திணைக்களத்துக்குக் கடிதம் எழுதும்படி தனது இணைப்புச் செயலாளருக்கு தான் கூறவில்லை என ஜனாதிபதி என்னிடம் கூறினார். அப்படி எழுதப்பட்டிருந்தால் இதுபற்றி விசாரிப்பதாகவும் உறுதியளித்தார்.

இது தொடர்பில் தமிழ் எம்.பிகளின் தூதுக்குழுவைச் சந்திக்க என்னிடம் அவர் உடன்பட்டார். இதற்கான திகதி விரைவில் தீர்மானிக்கப்படும்.

இதையடுத்து இவ்விவகாரம் பற்றி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் வரை, எந்தவித விகாரை கட்டுமானப் பணிக்கும் கன்னியாவில் இடம் கொடுக்கவேண்டாம் எனத் திருகோணமலை மாவட்ட செயலாளர் புஸ்பகுமாரவை அழைத்து நான் கூறியுள்ளேன் – என்றுள்ளது. (ஐ)

## இன்று கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நயாலெட்சோசி வூல் ஒன்பது நாள் பயணத்தை மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ளார்.

அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காகவே அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் ஜூலை 18ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்.

கொழும்பிலும், வடக்கு, கிழக்கு மற்றும் தென்பகுதிக்கும் அவர் பயணங்களை மேற்கொண்டு, மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளார்.

அரச உயர்மட்ட அதிகாரிகளையும், நீதித்துறை, ஊடகத்துறை, சிவில் சமூக குழுக்களையும், மனித உரிமை ஆணைக் குழுவையும் சந்தித்து பேசவுள்ளார்.

இவர் தனது பயணம் தொடர்பான விரிவான அறிக்கையை அடுத்த ஆண்டு ஜூன் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## காலத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான அரசியல் தீர்வை அரசு பெற்றுக்கொடுக்கவேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனா திராசா தெரிவித்தார்.

அரசியல் தீர்வு குறித்த அரசின் நிலைப்பாடுகள் மற்றும் கல்முனை விவகாரம் குறித்து வினவியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நான் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேச்சு நடத்தினேன். இதன்போது எமது மக்களின் அரசியல் நிலைப்பாடுகள், அரசியல் தீர்வு விடயங்கள் மற்றும் வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து பிரதமருக்கு தெளிவுபடுத்தினேன்.

கல்முனை தமிழ் பிரதேச செயலக விடயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசுடன் பேச்சு நடத்துவது ஆரோக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டார் – என்றார். (ஐ)

# 13 ஆம் நூற்றாண்டு ஆலயம் மன்னாரில்



மன்னார், ஜூலை 18

மன்னார் – குருந்தன்குளம் பகுதியில் புராதன விநாயகர் ஆலயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயம், 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விநாயகர் ஆலயம் கூறப்படுகிறது. யாழ். பல்கலைகழக தொல்லியல் துறையினரால் இந்த ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

தென்கையிலை ஆதீனம் அகத்தியர் அடிகள் மீதும் கன்னியா வெந்நீரூற்றுக் காணியின் உரிமையாளரான பெண் ஒருவர் மீதும் மேற்கொள்ளப்பட்ட கீழ்த்தரமான தாக்குதல் மூலம் பௌத்த – சிங்கள இனவெறியின் காட்டுமிராண்டித்தனம் மீண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அங்கிருந்த பொலீஸ் படை தவறியிருக்கின்றது.

மாறாக அங்கு திரண்டு வந்திருந்த தமிழ் மக்கள் மீது அடக்குமுறை கலந்த அழுத்தம் பொலிஸாரால் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பாரபட்சமின்றிச் செயற்படவேண்டிய பொலீஸ் அதிகாரிகள் சிங்கள – பௌத்த உணர்வாளர்களாகச் செயற்பட்டிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

இவற்றுக்கெல்லாம் மூல காரணம் நல்லாட்சி அரசின் அணுகுமுறையும் நடவடிக்கைகளுமே ஆகும்.

இனவெறியுடன் செயற்படும் தொல்லியல் திணைக்களம் அதிகாரப் பிரபுக்களை விருப்பம் போல ஆடவிட்டுச் சிங்கள – பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு மறைமுகமான ஆதரவை அரசு தொடர்ந்து வழங்கி வந்திருக்கின்றது.

அரசுக்குள்ளே ஓர் அரசு போலவே தொல்லியல் திணைக்களம் செயற்பட்டு வந்துள்ளது.

ஆயிரம் விகாரைகளை வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அமைக்கப் போவதாக கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பகிரங்கமாக பிரகடனம் செய்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமை தாங்கும் நல்லாட்சி அரசுகளுமே கன்னியா பிரச்சினைக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு கன்னியா பிரச்சினையில் தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்டுவதோடு உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக எடுத்தாகவேண்டும்.

கூட்டமைப்பின் தலைவரால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் திருகோணமலை மாவட்டத்தில் தமது அடிப்படை உரிமைகளுக்கு தமிழ் மக்கள் போராடவேண்டியுள்ள நிலைமையில் அரசுக்கு அழுத்தம் கொடுத்துப் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்து வைக்க கூட்டமைப்பு தவறினால் அதன் நாட்கள் எண்ணப்படும் நிலைமை தவிர்க்கப்பட முடியாதது என்பதைச் சம்பந்தப்பட்ட சகலரும் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தனை காலமும் எமது இனத்தின் விடுதலை நோக்கிய பயணத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் எட்டு கோடி தமிழர்களின் ஆதரவையே நாம் தொடர்ந்து நாடி வந்திருக்கின்றோம்.

ஆனால், தமிழ் இனத்தின் வரலாற்றையும் இருப்பையும் வாழ்வையும் சிதைக்கச் செயற்படும் பௌத்த – சிங்கள பேரினவாதம் இந்துக் கோவில்களையும் வரலாற்றுச் சின்னங்களையும் தொடர்ந்து குறிவைக்கப்போகிறது என்றால் இந்தத் திட்டத்தைத் தகர்த்தெறிய இந்திய நாட்டின் நூறு கோடிக்கு மேற்பட்ட இந்துக்களின் நேரடித் தலையீட்டை நாம் பகிரங்கமாக கோரவேண்டியிருக்கும் என்பதைச் சகல சிங்களக் கட்சிகளையும் சேர்ந்த பௌத்த – சிங்கள பேரினவாதிகள் அனைவருக்கும் நாம் கூறிக் கொள்கின்றோம் –என்றுள்ளது. (ஐ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

68 கிராம் கஞ்சாவை தமது உடையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 41வயதுடைய நிராந்த குணரத்ன, 43வயதுடைய சுமேத ரட்நாயக்க ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கிளிநொச்சியிலிருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir


# ஆளுநரின் பொதுமக்கள் தினம் நேற்று மன்னாரில் நடைபெற்றது





மன்னார், ஜூலை 18

வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் 'ஆளுநரின் பொதுமக்கள் தினம்' நேற்று மன்னார் மாவட்ட அரச அதிபர் செயலகத்தில் வடக்கு மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. (ஐ)

# வவுனியா சைவப்பிரகாசாவில் பார்வையாளர் கூடம் திறப்பு



வவுனியா, ஜூலை 18

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் மைதானத்தில் பார்வையாளர் கூடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகனின் பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இந்தப் பார்வையாளர் கூடத்தின் திறப்பு விழா பாடசாலையின் அதிபர் பா. கமலேஸ்வரியின் தலைமையில் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ச. சிவமோகனால் அது நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் அதிபர் கனகரத்தினத்தின் பெயர் சூட்டப்பட்ட இந்தப் பார்வையாளர் கூடத்தின் திறப்பு விழாவில் பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கஜேந்திரகுமாரின் கட்சிக்குள் பிளவு!

## நிதி மோசடியே காரணம் என்கிறார் டக்ளஸ்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சிக்குள் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இங்குள்ள பலரும் புலம் பெயர் நாடுகளில் உள்ள மக்களுக்குப் பொய்களைக் கூறி அவர்களை ஏமாற்றி அதிகளவிலான பணத்தை பெறுகின்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியினாலும் பெருமளவு பணம் புலம்பெயர் மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

ஆனால் இவ்வாறு பெறப்படும் பணத்தில் சொற்ப பணமே மக்களிடம் சேருகின்றது. இவ்வாறு முன்னணியினருக்குக் கிடைத்த பணத்தை அந்தக் கட்சியின் செயலாளர் மோசடி செய்துள்ளார் எனத் தற்போது பரவலாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அதாவது கட்சிக்கு வந்த நிதி தொடர்பான கணக்கு வழக்கு விவரங்களைக் கட்சியின் தலைவர் செயலாளரிடம் கோரியுள்ளமையால் இந்தப் பிரச்சினை பூதாகரமாக வெளிவந்துள்ளது. இதனால் கட்சித் தலைவர் மற்றும் செயலாளருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது–என்றார். (ஐ-07)

# ஜே.வி.பியின் பொதுவேட்பாளரும் ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பார்

## நளிந்த ஜயதிஸ்ஸ எம்.பி. தகவல்

கொழும்பு, ஜூலை 18

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான இடதுசாரி கூட்டணி சார்பாக ஒரு பொது வேட்பாளர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்படுவார் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எமது வேட்பாளரை அறிவிக்க முதலில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிக்கவேண்டும். ஒரு பொதுவான வேட்பாளர் தொடர்பாக பொதுமக்கள் வைத்திருந்த நம்பிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிதைத்துள்ளார்.

எனவே இடதுசாரி குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், ஜனநாயகத்தை ஆதரிக்கும் மற்றும் அதன் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முற்போக்கான வேட்பாளரையே ஜே.வி.பி. களமிறக்கும்.

கடந்த 71ஆண்டுகளில், இலங்கை சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன புதிய மற்றும் பழைய தலைவர்களுடன் ஆட்சிக்கு வந்த பிற கட்சிகள் இரண்டினாலும் நாட்டை மேம்படுத்த முடியவில்லை. எவ்வாறாயினும், இந்த இலக்கை ஜே.வி.பி.யினால் உடைத்தெறிய முடியும்–என்றார். (ஐ)

# வவுனியாவில் ஆடிப்பிறப்பு நிகழ்வு



வவுனியா, ஜூலை 18

வவுனியாவில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

நகரசபை கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் தர்மலிங்கம் வீதி, முச்சந்தியிலுள்ள நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுத் தூபியில் நகர உபபிதா சு.குமாரசுவாமி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, நினைவுத்தூபிக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவுப் பேருரையைத் தமிழருவி சிவகுமாரன் நிகழ்த்தியிருந்தார். 'ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை' என்ற பாடலை வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாணவர்கள் பாடியிருந்தனர்.

இந்த நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், நகரசபைச் செயலாளர், தமிழ்மணி அகளங்கன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், செயலாளர் மாணிக்கம் ஜெகன், முச்சக்கர வண்டிகள் உரிமையாளர் சங்கத் தலைவர் ரவி, சமூக ஆர்வலர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆடிப்பிறப்பை முன்னிட்டு வருடாவருடம் ஏற்பாடு செய்யப்பட்டு வந்த கூழ், கொழுக்கட்டை இம்முறை கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாணின் விலை 5 ரூபா உயர்வு!

கொழும்பு, ஜூலை 18

450 கிராம் எடையுள்ள பாண் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்படுவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மா ஒரு கிலோ கிராமின் விலை 8 ரூபால் அதிகரித்துள்ளதாக பிறிமா நிறுவனம் அறிவித்தது. இந்த விலை அதிகரிப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டது.



இந்த நிலையில் 450 கிராம் எடையுள்ள பாண் ஒன்றின் விலை 5 ரூபாவால் நேற்று (ஜூலை 17) நள்ளிரவுமுதல் அதிகரிப்பதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2019 இல் வெளியிடப்பெற்றது.